அறிவுச்சுடர்—கதிர் 4

6-2 485

மக்கள் வாழ்க்கைத் தத்துவம்

கா. சு.

M. A. A. Annamalai,
PALLATHUR
RAMNAD DT.

அறிவே ஆற்றல்

உமாதேவன்

Acc. No: 2100
R65

6-உ

2100

மக்கள் வாழ்க்கைத் தத்துவம்

ஆசிரியர்:
கா. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள்,
எம். ஏ., எம். எல்.

கோவிலூர் ஆதீனம்
2100
R65
...ர்-630 307

உமாதேவன் கம்பெனி
16, சேம்புதாஸ் தெரு, சென்னை-1

1948 — 1-25

முதற் பதிப்பு, 1948

பதிப்புரிமை

விலை ஒரு ரூபாய் நான்கு அணு.

The Jupiter Press Ltd., Madras.—11·48.

முன்னுரை

'அறிவுச்சுடர்' என்னும் மகுடம் புனைந்து வெளி வரும் இந்நூல் வரிசை அறிவும் அனுபவமும் வாய்ந்த நல்லறிஞரால் எழுதப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளைக்கொண்டு திகழ்வதாகும். மலர் தொறுஞ் சார்ந்து துளித்துளியாகத் தேனைச் சேகரித்துப் பிறர்க்குதவும் பெற்றிவாய்ந்த தேனீக்களைப் போலப் பன்னூற்பயிற்சியாலும் வாழ்க்கை அனுபவத்தாலும் அரிதின் முயன்று சேகரித்த அருங் கருத்துகளை அனைவருங் கற்றுப் பயனெய்துமாறு அறிஞர்கள் எழுதி உதவும் நூல்களை வெளியிடக் கருதியுள்ள எமக்குத் தமிழன்பர் காட்டும் ஆதரவே எம்மை இத்துறையில் தொடர்ந்து முயல ஊக்குதற்கு உறுதுணையாம். ஆதலின், அன்பர் பலரும் இவ்வரிசையில் வெளி வரும் நூல்களை வாங்கிப் படித்து எம்மை ஊக்கியருள வேண்டுகின்றோம்.

பதிப்பகத்தார்

மக்கள் வாழ்க்கைத் தத்துவம்

1

நமது உயிர் நிலை

'காகம் உறவு கலந்துண்ணக்
கண்டீர் அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குதையோ!
இன்புற் றிடநாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாரும் செகத்தீரே!'

—தாயுமானவர்

எவர் எதைத் தமக்கு இன்றியமையாத ஆதார மென்று நினைக்கிறாரோ, அவர் அதைத் தமது உயிர் நிலையென்பது வழக்கம். பொருள் போனால் தம் உயிர் போய்விடும் என்று எண்ணுகிறவருக்குப் பொருளே உயிர் நிலையாகும். சிலர்க்குக் காதலே உயிர் நிலையாகும். அது காதலிக்கப்பட்ட உயிர் நீங்கினதும் காதலித்த உயிரும் தன் உடம்பினின்றும் நீங்குவதால் அறியலாகும். கோவலன் கொலையுண்டதற்குக் காரணமாயிருந்த பாண்டிய மன்னன் உயிர் துறந்ததும் அவன் தேவி கட்டையேறிக் கனல் புகாது, அவன் பின் செல்வாள் போல உயிர் நீத்தனள். அவளுக்கு அவன் உயிர் நிலை என்பதற்குத்

தடை யாது? அளவற்ற ஆசையுடன் வளர்த்த ஆண் குழந்தை ஒன்று இறந்ததும் உயிர் சோர்கின்ற அன்னையும் உண்டு. மயிரிழந்த உடனே உயிர் இழக்கின்ற கவரிமான் போல, அவமானம் வந்த போது உயிர் நீப்பவர்க்கு மானம் உயிர் நிலையாகும். இதனுல், ஒருவரது உயிர் நிலை என்பது அவரது நினைவைப் பொறுத்ததென்பது தெரிகிறது.

நினைவின் ஆற்றல் அதிசயமானது! நினைவு அறிவு காட்டிய வழியிற் செல்ல வேண்டும். அறிவினுற் காணப்பட்ட உண்மையில் நினைவு நன்கு பதியுமானுல், அது நமக்குப் பெரும்பயன் விளைக்கும். நமது அறிவினுல் நுட்பமாக ஆராய்ந்து பார்ப்பின், உயிர்க்கு ஆதாரம் உடம்பு. உடம்பிற்கு ஆதாரம் உலகம். உலகமோ, பெரியது. உலகங்கள் எண்ணிறந்தன. அவை யாவும் அந்தரத்திலே நினைத்தற்கரிய வேகத்தோடு ஓடிக்கொண்டிருப்பன. அவற்றையெல்லாம் அவ்வவற்றிற்குரிய நெறியில் இயக்கி நடாத்துகின்ற எல்லையில்லாத முழுமுதற் பரம்பொருள் ஒன்றுண்டு. அதுவே, எல்லாவற்றிற்கும் இன்றியமையாத ஆதாரமாய்த் தோன்ருத் துணையாய்த் திகழும் உயிர் நிலையாகும். அதனையே பெரியார் 'உயிருக்குயிராய் விளங்கும் ஆருயிர் முதற் பொருள்' என்பர். அதனையே உயிரானது பற்றி விடாது தொடரவேண்டும். மாசற்ற தூய அறிவினையுடைய அம்முழுமுதலின் பேரறிவாற்றலில் ஒத்துச் சென்று வாழ்தலே கல்வியாற்பெற்ற அறிவின்

பயன் என்பதை ஆசிரியர் திருவள்ளுவனார் தெளி வாகக் குறிப்பித்தனர்.

> "கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅர் எனின் ?"

என்பது அவர் கூற்று.

உடம்பினைப் பாதுகாத்தல் உலக வாழ்க் கைப் பயன். உலகப் பொருளை ஆய்ந்தறிந்து பயன் கொள்ளுதல் கல்வி வாழ்க்கைப் பயன். இவ்விரண் டிற்கும் அப்பாற்பட்ட உயிர் வாழ்க்கையே உயிர்க் குறுதி பயக்கும் வாழ்க்கை எனப்படும். அதுவே நமது உண்மை உயிர்நிலையாகிய அகண்டசத்தி முதல்வரை ஆன்மாவிற்கண்டு களித்தலின் பயன். அதுவே எத் தகைய வாழ்விற்கும் நலம் பயப்பது.

> "உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
> திடம்பட ஈசனைத் தேடு."

என்று ஔவையார் குறிப்பித்ததும் அதுவே. இறை வரைக் கண்டு அவரோடு தொடர்புற்றால், அவர் நம்மோடு பேசுவார்; நம்மை ஆட்கொள்ளுவார்; நம் வழியாக அருட்செயல் செய்வார். அதனை அனு பவத்திற்கண்ட மணிவாசகனார் இறைவரை நோக்கி,

> "மன்ன என்னையோர் வார்த்தையுட்
> படுத்துப் பற்றினாய்."
>
> "அன்றே யென்றன் ஆவியும்
> உடலும் உடைமை யெல்லாமும்

குன்றே யனையாய்! என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ?''
"சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணை.''

என்றருளிச் செய்தது காண்க.

இறைவரது திருவருளானது என்றும் வற்றாத பெருவெள்ளமாய், எங்கும் பரவிச் செல்கின்றது. எல்லா உலகங்களுக்கும் எல்லா உயிர்கட்கும் உள்ளீடாய்ச் செல்லுகின்ற அந்த அருட்பேராற்றின் கரையில் நாம் வாழ முயல வேண்டும்.

நமது மாளிகையைக் கட்டுவதற்குத் துணை புரியுஞ் சத்தி நினைவென்பதே. நினைவு, ஒத்தவற்றை ஒன்று சேர்க்கும். நினைவை அகண்ட சத்தியின் அருட்புனலில் தோய்த்துக்கொண்டால், அது மிகுந்த நுட்பமும் ஆற்றலும் உடையதாய் விளங்கும். நமது விருப்பத்திற்கு மேற்பட்டு அது வேலை செய்யும். அது அளவற்ற செல்வத்தையும் ஊக்கத்தையும் அளிக்கும். நாம் செய்யக் கருதுவனவெல்லாம் அகநினைவில் உருவெடுத்துப் புற உலகில் வெளிப்படும். அஃது அகத்தில் காரணமெனப்படும்; புறத்தில் காரியமெனப்படும்.

திருவருட்புனல் நமதுள்ளத்தில் பாயுமானால், உடம்பின் உரத்ினும் மனத்தின் மாண்பினும் சிறந்த ஓர் அற்புத ஆற்றல் நமக்கு உண்டாகும். திருவருளோடு நாம் ஒத்துச் செல்வதே நம்முடைய

பெரிய உயிர் நிலையை நாம் சுற்றிச் செல்வதாகும். நமது உடம்பு கதிரவன் ஒளிபெற்று வாழ்வதுபோல, நமதுயிர் திருவருள் ஒளி பெற்று வாழ வேண்டும். நமது வாழ்க்கை மாளிகையின் இருளைத் துரத்தி நமக்கு இன்பம் கொடுப்பது திருவருட்கதிரே ஆகும்.

சிலர் உலகத்தை அருட்கண்ணாற் பார்ப்பர். சிலர் வினைக் கண்ணாற் பார்ப்பர். இருவர் கொள்கையும் அவரவர் வழிக்குப் பொருத்தமே. உலகியல் முறை ஊழின் வழி நடப்பதாலும், தீவினைப் பயனே உலகில் மிகுதியாய்த் தோன்றுமாதலாலும், வினைக் கண்ணிற்கு உலகத்தில் துன்பமிகுதியே புலனாம். ஊழ் முறை ஒருபுறமிருப்ப, இறைவரது அருளாட்சி முறை அதற்கு மேற்பட்டு விளங்குவதாகும். அருளின் தொடர்புடையார்க்கே அருட்கண்ணாற் பார்த்தல் கூடும். அவர்கட்கே மண்ணில் நல்ல வண்ணம் வாழலாமென்பது புலனாகும். அருட்பார்வையினரே பொருள்களின் முழு இயல்பை அறிந்தவர். வினைக் கண்ணார்க்குப் பொருள்களின் ஒரு பகுதியே தோன்றும். ஒளியாளர்க்கு ஒற்றுமையாகிய விண்ணுலகமும் இருளாளர்க்கு வேற்றுமையாகிய கீழுலகமும் முயற்சியின் பயனாகக் கை வரலாம். அருளாட்சியே நிலைத்த நற்பயன் தர வல்லது. ஆதலின், நல் வாழ்க்கை விரும்பும் மக்கள் அதனைப் பெறுதற்கே முயல வேண்டும்.

2

மெய்யென்பது யாது?

'மெய்' என்னும் சொல் 'நிலையானது' என்று பொருள்படும். நிலையில்லாதவையெல்லாம் 'பொய்' எனப்படும். கண்ணுக்குப் புலனாகும் பொருள்கள் தோன்றி வளர்ந்து சிறிது காலம் நிலைபெற்றுப் பின்னர் மறைகின்றன. உலகத்திற்காணப்படும் எப்பொருளும் அத்தன்மையதே. தோன்றுகின்ற எல்லாப் பொருளும் மறைந்தாலும், அவை சூனியமாய் விடுகின்றன என்று சொல்ல இடமில்லை. மறைதல் என்பது நம்மால் பார்க்க முடியாத நிலையை அடைதலேயாகும். குடம் மண்ணிலிருந்து உண்டாகின்றது. அதை உடைத்துப் பொடியாக்கிவிட்டால், குடவடிவம் மறைந்ததே ஒழிய, மண் மண்ணாகவே இருக்கின்றது; மண் ஒன்றுமில்லாமற் சூனியமாய்ப் போகவில்லை. மறுபடியும் குடத்தை மண்ணிலிருந்து குயவன் வனைகின்றான். எனவே, குடம் தோன்றுதற்கும் மறைதற்கும் முதற்காரணமாயிருந்தது மண். அது போல நெல் வித்து அழிந்து, பருவத்தில் நெல் முளை உண்டாகின்றது. நெல் வித்து எப்போதும் நெல்லை உண்டாக்குகிறதே ஒழியக் கரும்பை உண்டாக்குவதில்லை. எஃது எதினின்று தோன்றியதோ, அஃது அதிலேயே மறைந்து மீண்டும் அதிலிருந்தே உண்டாகின்றது. அது போல, உலகிலுள்ள எல்லாப் பொருளும் நிலம், நீர், தீ, காற்று,

வான் என்னும் ஐம்பூதக் கலப்பினுல் ஏற்பட்டன வாதலின், ஒடுங்குமிடத்து எல்லாம் ஐம்பூதங்களில் ஒடுங்கி, ஐம்பூதங்களும் அவற்றினும் நுட்பமாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவற்றில் ஒடுங்கி, அவையெல்லாம் படிப்படியாய்ச் சென்று மாயை என்பதில் ஒடுங்கும். மாயை என்பதே, காணப்படும் எல்லாப்பொருள்களும் மறைந்து உண்டாவதற்கு இடமான அடிப்படை. 'மாயா' என்பதே 'மாயை' என்று மருவிற்று. (மாயா = மாய் + ஆ; மாய் = மறைதல், ஆ = ஆதல்; உண்டாதல்.)

உலகில் காணப்படுவன எல்லாம் அறிவில்லாத பொருளே. அவற்ருேடு கலந்த அறிவுப்பொருள் கண்ணுற்காணவொண்ணுதது. நாம் ஒருவனேப் பார்க்குங்கால் அவனது உடம்பையே பார்க்கின்ருேம். அவனது உயிரின் செயல் உடம்பில் நிகழ்வதைப் பார்க்கின்ருேமே ஒழிய, உயிரை நேரே பார்ப்பதில்லை, உடம்பு தோன்றி நின்று அழிவது தெரிகிறது. அதனை வைத்தே உயிர் பிறக்கின்றது, வாழ்கின்றது, இறக்கின்றது என்று சொல்லுகின்ருேமே ஒழிய, உடம்பின் தொடர்பில்லாமல் உயிரைப்பற்றி யாதும் நாம் கூற முடியாது. உயிர் உடம்பிலிருந்தாலும், உடம்பிலுள்ள கருவிகளின் உதவி கொண்டே அஃது எல்லாம் செய்கின்றது. கண் ஒளி இல்லாமற்போனுல், உயிர் பார்க்க முடியாது. காது செவிடாயிருந்தால், உயிர் கேட்க முடியாது. கால் நொண்டியாயிருந்தால், உயிர் நடக்க முடியாது.

ஒவ்வோர் உடம்பிலும் வெவ்வேறு உயிர் இருக்கிறது. எல்லா உடம்புகளும் உயிர் நீங்குங்கால் ஐம்பூதங்களில் ஒடுங்குகின்றன. ஐம்பூதங்களாலாகிய உலகமும் ஒரு காலத்தில் ஒடுங்கக்கூடியதாயிருக்கிறது. ஓர் உலகம் ஒடுங்கவே, எல்லா உலகங்களும் ஒடுங்கத் தக்கன என்பதே ஊகிக்கப்படும். உலகங்களெல்லாம் ஐம்பூதங்களினுல் ஆக்கப்பட்டவையாதலின், அவையெல்லாம் ஐம்பூதங்களில் ஒடுங்கி, கடைசியாக மாயையிலேயே ஒடுங்குவன. அம்மாயை என்பது தோன்றும் எப்பொருட்கும் அடிப்படையாய்த் தான் தோன்ரு நிலையிலிருப்பதால் அருவமாய், தன்னிலையில் மாருதிருப்பதால் மெய்யாய், அளவற்ற உலகங்கள் தோன்றி ஒடுங்குவதற்குக் காரணமாயிருப்பதால் அளவற்றதாய் இருப்பதாகும்.

அம்மாயை எல்லையில்லாததாயிருக்கும் மெய்ப்பொருளாயினும், அஃது அறிவில்லாத பொருளே. ஆதலால், அது தானுகவே உலகமாக உருவெடாது. மண்ணிலிருந்து குடம் தானுக உருவெடாமல், குயவனுல் வனையப்படுதல்போல, மாயையினின்று உலகங்களைத் தோற்றுவிப்பதற்கு அறிவுடைய முதல்வன் ஒருவன் வேண்டும். உயிர்கள் பலவாயும், உடம்பினுல் அறிவு விளங்கத் தக்கதாயும் இருத்தலால், உடம்பு தோன்றுதற்குக் காரணமாயுள்ள உலகத்தை உயிர்கள் தோற்றுவிக்கும் ஆற்றல் உடையன அல்ல. உலகங்களெல்லாம் இயற்கைச் சட்டமுறைப்படி தோன்றி நின்று ஒடுங்குகின்றன. ஆத

Dr. A. A. Annamalai, PALLATHUR, RAMNAD DT.

லால், அளவற்ற மாயையினின்று அளவற்ற உலகங்களை முறைப்படி தோற்றுவித்து நடத்துதற்கு அளவற்ற அறிவும் ஆற்றலும் உடைய முதல்வர் ஒருவர் வேண்டும். அவரே எல்லா உயிர்களுக்கும், எல்லா உலகங்களுக்கும் ஆதாரமான வியாபகமுடையவராய், உடம்பெங்கும் உயிர் வியாபித்திருத்தல் போல எங்கும் நிறைந்து யாவற்றையும் இயக்குகிறவராவர். மாயையும் உயிரும் அவரைப்போல அழிவில்லாதனவாயிருந்தாலும், மாயை பல பல வகையாக வேறுபடுதல் பற்றியும், உயிர் மாயையாலாகிய உடம்புகளோடு சேர்ந்து பிறந்தும் இறந்தும் மாறுபடுதல் பற்றியும் என்றும் ஒரே நிலைமையில் இருப்பனவல்ல. மாயை அறிவில்லாதது. உயிர் சிற்றறிவுடையது. ஆதலால், கடவுள், உயிர், மாயை என்பன அழியாப் பொருளாய் இருப்பினும், கடவுள் ஒருவரே என்றும் ஒரே நிலையில் இருப்பவர், என்றும் ஒரே நிலையில் இருக்கும் பொருளே சிறப்பாக மெய்யெனப்படும். ஆதலால், மெய்யென்பது யாதெனில், அழியாத பொருள் என்னும் கருத்தில் கடவுள், உயிர், மாயை என்னும் மூன்றையும் கூறலாமெனினும், என்றும் ஒரேநிலையிலிருப்பதென்ற கருத்தில் கடவுளாகிய எல்லையற்ற ஒரு பரம்பொருளே மெய்ப்பொருள், மெய் என்று சொல்லப்படுவதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவரென அறிக.

உயிர்கள் எல்லாவற்றிற்கும் அளவற்ற முதல்வர் ஒருவரே ஆதாரமாய் இருத்தலின், உயிர்

களின் பல்வேறு வகை ஆற்றல்களுக்கும் திறமைகளுக்கும் கடவுளுடைய சத்தியே பயன் கொடுக்கும் ஆதாரமாகும். உயிர்கள் எண்ணிறந்தனவாதலால், அவற்றின் சத்திகளுக்கெல்லாம் ஆதாரமாயிருக்கும் கடவுட்பெருஞ்சத்தி, எல்லையற்ற ஆற்றல்களை உடையதே. உயிர்களின் குணங்களாகிய அன்பு, அறிவு, சாந்தம், செயலாற்றல் முதலிய எல்லாவற்றிற்கும் அதுவே அளவற்ற மூலமாகும். அதுவே உலகங்களெல்லாம் நடைபெறுதற்குரிய சத்திகளுக்கும் சட்டங்களுக்கும் மூலமாகும். அஃது அழிகின்ற ஒரு பொருளுமாகாது, எல்லாப் பொருட்கும் இன்றியமையாத ஆதரவாக இருத்தலின், மணிவாசகனர், 'ஒன்றும் நீ அல்லை ; அன்றி ஒன்றில்லை,' என்றார்.

எல்லா உலகங்களையும், எல்லாச் சட்டங்களையும், எல்லாத் திட்டங்களையும் உண்டாக்கிய மாபெருஞ்சத்தியே அவை எல்லாவற்றையுங் கடந்த பெரிய பொருளாதலின், கடந்த பொருளென்ற கருத்தில் அதனைப் பெரியார் 'கடவுள்' என்னும் பெயரால் வழங்கினர். 'எவ்வுயிரையும் கடவுள் ஆட்கொள்ளுகிறார்,' என்ற கருத்தில், 'ஆண்டவர்' என்பர் ; எல்லாவற்றையும் இயக்குவதனால், 'இயவுள்' என்பர் ; எல்லாவற்றிற்கும் நிலைத்த இன்பத்தைக் கொடுப்பதால், 'ஆனந்தம்' அல்லது 'சிவம்' என்பர் ; எல்லாவற்றிலும் பெரியது ஆதலின், 'பிரமம்' என்பர் ; எல்லாவற்றையும் பாதுகாப்பதால், 'ஓம்' என்பர். கடவுள் வியாபகத்துள் எல்லாம் அடங்கு

தலின், கடவுளை 'விஷ்ணு' என்பர்; கடவுள் எல்லாவற்றையும் தமக்கு ஒருவர் அறிவிப்பாரின்றித் தாமே அறிதலின், 'இயற்கை' என்றும், 'இயற்கையறிவர்' என்றுங் கூறுவர்; எல்லாவற்றையும் அறிதலின், 'முற்றறிவர், பரஞ்சோதி' என்பர். எல்லா ஆற்றலும் உடைமையின், 'வரம்பிலாற்றல் உடையவர்' என்பது அவருக்குப்பேராயிற்று. இயல்பாகவே யாதொரு குற்றமும் இல்லாதவராதலின், 'மாசிலா மணி' என்பர். அவருக்கு மேற்பட்டதொன்றும் இல்லையாதலின், 'இறைவர்' என்பர்; அழியும் உடம்பு எடாது அன்பர் உள்ளத்தில் அறிவிற்கறிவாயிருத்தலின், 'புனிதப் பொன் மேனியர்' என்பர்; அவர் பேரருள் உடையவராதலின், 'அந்தணர்' என்பர்; உயிர்கட்கு மேலானவராதலின், 'பேருயிர், பரமாத்துமா' என்பர். இவ்வாறு கடவுளின் தன்மைகளையொட்டி அவர்க்கு வெவ்வேறு பெயர்கள் ஏற்பட்டுள்ளன. எப்பெயராலுரைத்தாலும், கடவுள் ஒரு பொருளேயாதலின், 'ஒருவர் தாம்பல பேருளர் காண்மினோ' என்றார் சிவஞான முனிவர். எப்பொருளுள்ளும் உள்ளீடாய் நின்று நடத்துவதால், அவரை, 'அவன்' என்றும், 'அவள்' என்றும் 'அது' என்றும் கூறலாம். ஒருமையிலுங்கூறலாம்; பன்மையிலுங் கூறலாம்.

3

மக்களின் பெருங்கடமை யாது?

நமக்கு உயிர்க்கு உயிராயிருக்கிற அளவற்ற முதல்வரது வியாபகத்துள் நாம் யாவரும் அடங்கியிருப்பவர். அவருக்குப் புறம்பாக எதுவுமில்லை. அவர் நம்மிலும் உலகத்திலும் பிரித்தறிய முடியாதபடி கலந்திருத்தலை நாம் உணர்வோமாயின், அவரோடு தொடர்புற்று அவரது அருளாட்சியே மேற்பட்டு விளங்கும்படி நடப்பதே நமது கடமையென்பது நமக்குத் தெரியவரும். திருவருட்புனல் நம் உள்ளத்திற்பாய்ந்து வெளிப்பட்டு விளங்கவொட்டாமல், அறியாமையென்னுங்கதவினுல் நமது உள்ளத்தை நாம் அடைத்துக்கொள்ளுவது இயற்கையாய் இருக்கின்றது.

'பொது மக்களுக்கும், சிறந்த சான்ருேர், அறிஞர், முனிவர், தவத்தினர் முதலியவர்க்கும் வேறுபாடு என்ன?' என்ருல், இப்பெரியார்கள் கடவுள் தங்களோடு இரண்டற்ற முறையில் கலந்திருப்பதை அறிந்து, சக்கரத்திற்கு அச்சுப்போலத் தங்களுக்கு அச்சாய் இருக்கின்ருர் கடவுள் என்பதை உணர்ந்து, தங்களது நெஞ்சத்தில் திருவருள் ஒளி விசும்படி அதனைத் திறந்து வைத்திருக்கிருர்கள். சாதாரண மக்கள் இதைப்பற்றிச் சிந்தியாமல், உலக வழியிற்சென்று, பெரிய உண்மைப் பயனைப் பெருதிருக்கின்ருர்கள்.

நம் நாட்டில் பண்டைக் காலப் பெரியார்கள் தாங்கள் பெற்ற பேரின்பத்தைப் பொது மக்களும் பெறவேண்டுமென்ற கருத்தோடு கடவுளின் பெருமையை நினைவூட்டுதற்பொருட்டு அரண்மனை போன்ற கோவில்கள், வழிபாடுகள், திருவிழாக்கள் முதலியன வகுத்தமைத்தார்கள். கடவுள் நமக்கு நடுவிலேயே அரசர்க்கரசராய், அவரவர் விரும்பிய வடிவத்தோடு அவரவர்க்கு நாடோறும் காட்சியின்பம் அளிப்பவராய், கோலாகலமாய் வீற்றிருப்பதை நினைவுபடுத்தற்கே ஆலய வழிபாடு ஒவ்வொரு சிற்றூரிலும் அமைக்கப்பட்டிருந்தது. 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா,' என்பதும் வாழ்க்கைக்குக் கடவுள் நினைவு இன்றியமையாதது என்பதை உணர்த்துவதாகும். 'கடவுளின் திருவடி நிழலானது அன்பர்க்கு ஆனந்தமான தாமரைத் தடாகம் போன்றதாகும்,' என்பதைத் திருவருள் பெற்ற பெரியார் ஒருவர்,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே."

என்று அழகு பெறப் பாடியிருக்கின்றார்.

'இளவேனிற்காலத்தில் மாலைப் பொழுதின்கண் நிலவொளி எங்கும் பரவியிருக்கும் நேரத்தில் பல வகை நறுமலர்களும் வீசுகின்ற மணத்தை நுகர்ந்துகொண்டு, குற்றமற்ற இனிய வீணையின்

இசை நயத்தை அனுபவித்துக்கொண்டு, வண்டுகள் ஒலிக்கின்ற தாமரைத் தடாகத்தின் கரையில் தெள்ளிய தீம்புனலைப் பருகிக்கொண்டு, தென்றற்காற்றினால் உடல் குளிரப் பெற்று வீற்றிருக்குந் தன்மையைப் போல, நயந் தந்தது எம் தந்தையாகிய பெருமானது இணையடி நிழல்,' என்பது இப்பாட்டின் கருத்தாகும். இதனால், ஐம்பொறிகளும் அனுபவித்தற்குரிய இன்பங்களும் இறைவரது பேரறிவிலும் பெருஞ்செயலிலும் தம் அறிவுஞ் செயலும் அடங்கப்பெற்ற அன்பர்கட்கு உண்டாவன என்பதைக் குறித்தவாறு காண்க. இப்பாட்டினுள் 'வீணை' என்பது காதுக்கின்பந் தருவது; 'மதியம்' என்பது கண்ணிற்கு இன்பந் தருவது; 'தென்றல்' என்பது உடம்பிற்கு இன்பந் தருவது. இளவேனிலில் மிகும் பூவின் மணம் மூக்கிற்கு இன்பந் தருவது; பொய்கை நீர் நாவிற்கு இன்பந் தருவது; ஈசன் தந்தையாக அருள் செய்யும் முறை எல்லாவற்றிலுஞ் சிறந்த பேரின்பந் தருவது என்பதை ஊகித்தறிந்துகொள்க.

இவ்வாறு திருவருள் பெற்ற அன்பர்கள் இறைவர் நமது உயிரில் இரண்டறக் கலந்து நமக்குப் பேரருள் செய்யும் முறைமையை நாம் அறியும்படி ஆயிரக் கணக்கான நூல்களிற் சொன்னாலும் நம் மனம் அவற்றில் புகாமல் இருப்பதைக் குறித்துப் பரிவு கூர்கின்ற பெரியார் ஒருவர்,

" குறிக ளும்அடை யாளமுங் கோவிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்

அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்! மனம் என்கொல் புகாததே?''

என வினவுகின்றார்.

"அறியாமைக்குக் காரணமாகிய மன இருளோடு இரண்டறக் கலந்து நிற்கின்றது போல அக்கலப்பை ஒழித்து என்றும் நிலைத்த மெய்ஞ்ஞானப் பொருளோடு இரண்டறக் கலந்து வாழும் நாள் என்று வருமோ!'' என்னும் கருத்தால், தாயுமானவர்,

"ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினே டத்துவிதஞ் சாருநாள் எந்நாளோ!''

என்று பகர்கின்றார்.

கடவுளுடைய அருட்புனல் நமது உயிரின் கண்ணே பாய்வதற்கு மனம் என்கின்ற மடையானது செவ்வையாகத் திறக்கப்பட வேண்டும். ஆதலால், மனம் குற்றமற்ற நிலையை அடைய வேண்டுமென்பதைப் பெரியார் வற்புறுத்துகின்றனர்.

"மனமே! உன் புரைகள் தீர்ந்தாய்
என்னிலோ யான்பிழைப்பேன்; எனக்கினியார்
உன்போல்வா ரில்லை இல்லை;
உன்னிலோ திருவருளுக் கொப்பாவாய்.''

என்றார் தாயுமானவர்.

இன்னுமவர் மனத்தினைப் பார்த்து, 'வீணாக உலகப் பரப்பு அனைத்தையும் உட்கொண்டாலும்

என் பயன்? ஆனந்தக் கடலில் மூழ்க நீ படிக்க மாட்டாயா? திருவருளாகிய திருவடியின்கண் தாழ்ந்து வணங்காயா? அங்ஙனம் வணங்குவாயாயின், நீயும் என்போல அழியாதிருப்பாய்,' என்று நன்மதி உரைப்பர். திருந்தாத மனத்தின் தன்மையைப் பல இடங்களில் தாயுமானவர் அழகாகக் கூறியுள்ளார்.

அவர் கூறும் கருத்துகளுள் சில வருமாறு:—
"சொன்னபடி இணங்கிவாராத பிள்ளையைத் தாயானவள் தொட்டிலில் வைத்து ஆட்டித் தொடையினைக் கிள்ளுதல்போல, மனமானது ஏதாவது ஒரு பொருளிலே நினைப்பை உண்டாக்கும்; அந்நினைப்பினை மறைக்கும் அறியாமை நிலங்களில் தலை சுற்றியாடும்; கணவனுக்கு அடங்காத பெண் போலத் தானே வெளிச் சென்று அலையும்; கல்லினும் இரும்பினும் மிகுதிப்பட்ட வன்மையைக் காட்டும்; காணுமற் கேட்டவற்றை எல்லாம் தான் கண்டனவாகக் காட்டி உயிரினின்று அறிவினை அணுவாகச் சுருக்கி விடும்; கண்ணினை மூடி விழித்தற்குரிய கணப்பொழுதை உலகம் தோன்றி ஒடுங்கும் வரையுள்ள கற்ப நீடூழி காலமாகத் தோற்றுவிக்கும்; நிலையில்லாத இவ்வுலகத்தை எவ்வளவோ சிறந்த உலகமாக எண்ணும்படி செய்விக்கும்; மகளிர்பாற் பெறக் கூடிய சிறிய அளவுடைய இன்பத்தைப் பெரிய மேருவின் அளவினதாகக் காட்டிக் குடும்பச் சுமையை எடுங்களென்று நம்மைத் தூண்டித் தன்னையே

சும்மாடாக வைத்து நம்மைச் சுமையாளாகவுஞ் செய்து, நாள்தோறுங் கெடுமதியை அளித்து நல்லறிவனைத்தையுங் கொள்ளையிட்டுச் சூழ்ச்சிகள் மிக்க ஒரு வாழ்க்கை நாடகத்தை நடிக்கும். இம்மனத்தின் வியத்தகும் இயல்பினை என்னென்று சொல்வோம்! இதனை வெல்லுதல் எளிதாகுமோ! கடவுளே, நும் திருவருளைப் பெற்ற பேர்க்கெல்லாம் ஒளியோடு விளங்குகின்ற இந்த மனம் அருள் தன்மையுடையதோ, அல்லது மருள் தன்மையுடையதோ? இந்த நுட்பத்தை நீர் எனக்குச் சொல்லவேண்டும்,'' என்கிறார்.

உயிர் உலகத்தை அறிவதற்கு மனமே கருவியாயுள்ளது. மனம் குற்றமற்றிருந்தால், அது மேலான நெறிக்குச் செல்வதற்குத் துணை புரியும். மனம் தீய நெறியிற்சென்றால், அது கீழான நிலையைக் கொடுக்கும். உயிரானது மனத்தை அடக்கி ஆள்வதே அது கடவுளின் கலப்பைத் தடையின்றி உணர்வதற்குக் காரணமாகும். மனமானது நெடுநாட்பழகிய பழக்கத்தால் நாம் அது போன போக்கிற்செல்லாமல் நல்லதொன்றை நாடும் போது நம்மை மல்லரைப் போல வந்து எதிர்க்கும். அக்கருத்தினைத் தாயுமானவர் அழகாகக் கூறுமிடத்து,

'' ஏதுக்குச் சும்மா விருமனமே என்றுனக்குப்
போதித்த உண்மைஎங்கே போகவிட்டாய்?—வாதுக்கு
வந்தெதிர்த்த மல்லரைப்போல் வாதாடி னாயே!உன்
புந்தியென்ன, போதமென்ன, போ!''

என மனத்தைக் கடிவது காண்க.

மனமானது அடக்கம் உற்றுர்போலத் தோன்றி ஞலும், சூதாடுவார் போலப் பழைய தீச்செயலின் கண்ணே மீண்டுமீண்டுஞ் செல்லும் என்பதைச்

"சூதாடு வார்போற் றுவண்டு துவண்டுமனம்
வாதாடின் என்னபலன் வாய்க்கும் பராபரமே!"

எனக் கூறி விளக்கினுர்.

'மனத்தை நாம் ஆளவேண்டுமேயொழிய, அது நம்மையாள இடங்கொடுத்து அதன் விருப்பப்படி நாம் செல்வதால் ஒரு பயனும் உண்டாகாது. குரங்கு கையிற் பூமாலே போல நாம் அல்லற்படு வோம்,' என்னுங்கருத்தால்,

"காடுங் கரையும் மனக்குரங்கு
காலிட் டோட அதன்பிறகே
ஓடுந் தொழிலாற் பயனுளதோ?"

என்றும்,

"மனமான வானரக் கைம்மாலே யாகாமல்
எனேயாள் அடிகளடி எய்துநாள் எந்நாளோ!"

என்றும் பெரியார் கூறுதல் காண்க.

மனம் தன் போக்குப்படி செல்லவொட்டாமல் அடக்கியவிடத்து அது இறந்து போவதாகக் கூறு தல் நூல் வழக்கு. மனத்தை இறக்கும்படி செய்யும் கல்வியே தக்க கல்வியென்னும் கருத்தால்,

"மனமிறக்கக் கற்ருலுஞ்
சித்தியெல்லாம் பெற்ருலும்
மனமிறக்கக் கல்லார்க்கு
வாயேன் பராபரமே!"

என்ருர் தாயுமானவர்.

'அறம் என்பது, மனத்துக்கண் மாசிலன் ஆதல்,' என்ருர் திருவள்ளுவர். ஆதலால், மனத்தில் தீய எண்ணங்கள் புகாமற்காப்பதே கடவுள் அருளொளி அதன்கண் விளங்குதற்குச் செய்யத்தக்க உபாயமாகும். 'நினைப்பே பிறப்பு; மறப்பே இறப்பு,' என்பது பெரியார் கருத்து. மனத்தின் தொழிலே நினைவு; நினைவின் வெளிப்பாடே சொல்; சொல்லின் படியே செயல் நிகழும். மனத்தின் ஆற்றல், ஒத்ததைத் தன்பால் இழுக்கும். நமக்குத் தெரிந்தும் தெரியாமலும் அது வேலை செய்யும். எண்ணங்களுக்கு வடிவம், குணம், சத்து, சத்தி முதலிய எல்லாம் உண்டென்பர் அறிஞர். மனம் ஐம்பூதங்களோடு தொடர்புடையது. ஆதலின், நினைப்பினுலேயே ஒன்றையொன்ருக மாற்றும் ஆற்றலும் அதற்கு உண்டு. எல்லாம் அகநினைவில் தோன்றியே புற உலகில் வெளிப்படுகின்றன. ஆதலினுல், திருவள்ளுவர், 'உள்ளத்தால் உள்ளலுந்தீதே,' என்ருர். நினைப்பால் அல்லது பாவனையால் நன்மை தீமை விளைதல் உலகிற்காணப்படும். சிலர் சொல்லுஞ்சொற்கள் தீய நினைவோடு கூடி இருத்தலின், அவர் சாபச்சொல் பலிக்கின்றதென்று உலகினர்

கூறக் கேட்கின்ருேம். அவ்வாறே நற்சொல்லும் நற்பயனையே தருவதுண்டு. இரண்டினையுந் தமது மொழியால் தவருது செய்யக்கூடியவர்களையே ‘நிறை மொழி மாந்தர்’ என்பர். கடவுட்பூசனை செய்து கொண்டிருந்தபோது பூசனை புரியும் திருவடிவத்தை உதைத்த தம் தந்தையார் காலினைச் சண்டேசுர நாயனுர் தடுப்பதற்கு எடுத்த குச்சியானது வாளாய் மாறிற்று. கௌரி என்னும் பெண் பூசனை புரிந்த காட்டுத் தறிக்கல் திருவடிவமாய் மாறிற்று என்று திருவிளையாடற்புராணம் கூறுகின்றது. கருடபாவனை உள்ளவர்கள், தங்கள் பார்வையால் பாம்பின் விடத்தைக் குணப்படுத்துதல் உண்டு. அப்படிச் செய்வாரது மனம் கருடனுக்கு ஆதாரமாகிய கடவுட் சத்திமயமாக நினைப்பால் ஆகின்றதென்பது அறிஞர் கொள்கை.

மனம் என்றும் நன்றே நினைத்தல் வேண்டும்; நன்றல்லாதவற்றை உடனே மறந்துவிடவேண்டும்.

“நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.”

என்ற நாயனுர் கருத்தும் அதுவே.

நம்மைச் சுற்றி எப்போதும் நினைவு அலைகள் பரவிக்கொண்டிருக்கின்றன. அவற்ருல் நாம் தெரிந்தும் தெரியாமலும் தாக்கப்படுகின்ருேம். தீய அலைகள் நம் மனத்திற்புகாவண்ணம் நாம் கவன மாய் மனத்தைப் பாதுகாக்க வேண்டும். தீமை செய்

தார்க்குத் தீமை செய்யக் கருதுதலும் நமக்குக் கெடு தியே. நினைவை ஒழுங்கு படுத்திக்கொண்டால், மனம் நம்முடைய சொல் வழி நின்று நமக்கு உண் மையை அறிவிக்கும். அப்போது மனத்தில் அருள் விளங்கும். அருளின் நிகழ்ந்து உண்மையை உணர்த் தும் மனமே நமக்குக் குருவும் ஆகும். ஆதலின், தாயுமானவர்,

“ஆனாலும் மனஞ்சடமென்
றழுங்காதே யுண்மை
அறிவித்த இடங்குருவாம்
அருளிலதொன் றிலையே.”

என்றார்.

நம் அறிவில் இறைவருடைய அறிவு கலந்திருக் கின்றது. நம் அறிவிற்கும் விருப்பத்திற்கும் கட்டுப் பாடுகளும் இடைஞ்சல்களும் உண்டு. நம் அறிவைக் கடவுள் திருவுள்ளத்தில் இலயமாகத் திருப்புவோ மானால், தெய்வத்திருவுள்ளம் நமது உள்ளத்தின் வாயிலாக நமக்கு நிலைத்த உண்மையை உணர்த்தும். அதுவே சிறந்த உள்ளுணர்ச்சி எனப்படும். நம் மனத்தை எவ்வளவு இறைவர் விருப்பம் நிகழ்வதற் குத் திறந்து வைக்கின்றோமோ, அவ்வளவு உள் ளுணர்ச்சி தெய்வக்கட்டளையாய் விளங்கி நாளடை வில் நமக்குத் தவறாத துணையாகும். தெய்வத்தோடு மனம் தொடர்பு படுவதற்குத் தன்னயம் கருதாத வாழ்க்கையே அவசியமாகும்.

பெரிய சமயங்களெல்லாம் இந்த முக்கியமான உண்மையையே அடிப்படையாயுடையன. எல்லாவற்றிற்கும் ஆதாரமாக அளவற்ற பூரணப்பொருள் ஒன்று உண்டென்பதும், அதனை உணர்ந்து, அதன் திருவருளுக்கிணங்கி நடப்பதே மனிதன் கடமை என்பதும் எல்லார்க்கும் பொதுவான கொள்கையே. இந்தக் கொள்கையை யாரும் கண்டிக்க முடியாது. சமயத்திருத்தம் பேசுபவர்களெல்லாம் கடவுளுக்கு ஒவ்வாத தன்மைகளை அவர்மேல் மனிதர்கள் ஏற்றிச் சொல்வதைக் கண்டிக்கின்றார்கள். மனிதர்களுக்கே குற்றமாயிருக்கக்கூடிய பொறாமை, பழிவாங்குதல், கோபம் முதலிய தீக்குணங்களைக் கடவுளுக்கு ஏற்றிப் பேசுதல் அறியாமையே. சமயச் சண்டைகளெல்லாம் அற்ப விஷயங்களையும் அமுக்கியமான செய்திகளையும் பற்றியே நிகழ்கின்றன. சமயத்தின் பேரால் மக்கள் தங்கள் தீக்குணங்களை வெளிப்படுத்துகின்றார்கள். ஒவ்வொரு தேசத்திற்குமுரிய பழக்க வழக்கங்கள் வேறுபடுதல் பற்றி விளையுஞ் சமயப்போர், தேசச் சண்டையாகுமேயன்றிச் சமயச் சண்டையாகாது. உண்மை வழிபாட்டிற்குக் கடவுளும் உயிருமே வேண்டப்படுவன. இவ்வுண்மையை மக்கள் உணர்ந்தால், எல்லாரும் ஒரே குலம் போல ஒரே இறைவரை ஓரிடத்திலேயே வழிபடலாம். சமய வேறுபாடுகளை விருப்பு வெறுப்பு, மேன்மை தாழ்மை என்பவற்றை ஒழித்த மனப்பான்மையுடன் உண்மை ஆராய்ச்சியாளர் ஆராய்வாரானல், சமயச் சண்டை ஏற்படுவதற்கு இடம்

இராது. 'கிறிஸ்து பெரியவரா, புத்தர் பெரியவரா?' என்பது போன்ற விவகாரங்கள் அத்தன்மையன. 'விவிலிய நூல் கடவுள் வாக்கா, வேதம் கடவுள் வாக்கா?' என்னும் கேள்வி ஏற்படலாம். கடவுள் அருள் பெற்றவர்களுடைய வாக்கெல்லாம் கடவுள் வாக்கே. யாருக்காக எந்நூல் ஏற்பட்டதோ, அவர் மனப் பக்குவத்திற்குத் தக்கபடி அந்நூல் கருத்து களைப் பேசும். கடவுள் ஒரு சிறு கூட்டத்தாருக்குத் தான் அருள் நூல் தந்திருக்கிறார் என்பது தவறு. கடவுளுக்கு இன்னார் இனியார் என்னும் வேற்றுமை இல்லை. ஒரு நூலுக்கே பல புலவர் வெவ்வேறு வகையாகப் பொருள் கூறுகின்றனர். அதனால், வெவ்வேறு மதங்கள் எழுவதும் உண்டு. விரிந்த மனமுடையவர்கள் எல்லா மதத்திலும் உள்ள உண் மையை எடுத்துக்கொள்வார்கள். பல பல மதமும் ஈற்றின் ஒரு வழிப்படும்.

" வேறுபடுஞ் சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளே! நின் விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை ; முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா."

என்றார் தாயுமானவர். ஆண்டவர் ஒருவருக்கு நாமெல்லாம் அடியாரென்ற ஒரு கொள்கை எங்கும் பரவுமானால், அஃது அமைதி, மகிழ்ச்சி என்பவற் றைக் கொடுக்கும். அவ்வுண்மையை உணரும் அறிவை எல்லா மக்களுக்கும் உண்டாக்கவேண்டும். வேறுபாடுகளை ஒழிக்க வேண்டும். ஒவ்வொருவனும்

தான் தான் விரும்பிய முறையில் வழிபாடு செய்யும் உரிமையைத் தடைப்படுத்தல் கூடாது. ஆனால், ஒருவன் வழிபாடு மற்றொருவனுக்கு இடைஞ்சல் விளைவித்தல் கூடாது. கடவுட்சிந்தனையும் கருணை வாழ்க்கையுமே சமயப் பெரும்பயன்கள். அவையே மக்கட்பெருங்கடமை. அவையே உலகத்திற் காரிய சித்திக்குப் பெருந்துணையாவன.

கோவிலூர் ஆதீனம்
2100
R65
கோவிலூர்-630 307

4
அன்பின் சிறப்பு

உயிரின் சிறந்த தன்மைகளெல்லாம் அன்பு, அறிவு, ஆற்றல் என்னும் மூன்றனுள் அடங்கும். எதிர்ப்பயன் குறியாது செய்யும் அன்பே அருள் எனப்படும். தமக்கென ஒன்றும் வேண்டாது, பூரணத் தன்மை வாய்ந்த அகண்ட முதல்வர் உயிர்களை ஆட்கொள்ளுவதற்குக் காரணம், கைம்மாறு கருதாத் அவரது அருளே ஆகும். நம்முடைய அறிவில் அவர் இரண்டறக் கலந்திருப்பதற்குக் காரணம், அவரது கருணையே. அளவற்ற அன்புடைய முதல்வர், அருளினால் நமது அறிவுக்கு அறிவாயிருப்பதை நாம் உணர்வோமானால், நாமும் அன்பு நிறையப் பெற்று, யாவரிடமும் அன்பு செலுத்துவோம்; அன்பு என்பதே எல்லாரையும் ஒற்றுமைப்படுத்துவதென்பதை நன்குணர்வோம். அதை உணர்ந்தவுடன் யார்க்கும் எதற்கும் நாம் தீங்கு செய்தல் இயலாது. கடவுளின் ஒரு பெரு வியாபகத்துள் அடங்கிய நாம், ஒரு பேருடம்பின் உறுப்புகளாகவே எவற்றையுங் காண்போம். ஒவ்வொருவருக்கும் அவரவருக்குத் தக்கபடி இறைவர் நன்மை செய்கின்றார் என்பதைத் தெரிந்துகொண்டால், நம் தப்பெண்ணங்களும் பகைமையுணர்ச்சிகளும் நம்மைவிட்டு ஒழிந்துவிடும். யாருள்ளும் தங்கியிருக்கின்ற கடவுளையே நாம் பார்ப்போம்.

ஒரு பெரிய உடம்பின் உறுப்பென்று தம்மைக் கருதுகின்ற எந்த அறிஞரும் தன்னலங்காரணமாகப் பிறர்க்குத் தீமை இழைக்க மாட்டார்; பிறர்க்குக் கெடுதி விளைந்தால் தமக்கும் அது கெடுதியே என்பதை உணர்வார்: பிறர்க்கு அன்பு காட்டினால் தமக்கும் அன்பு வருவதை அறிவார். நினைவின் சட்டமும் அதுவே. நாம் யாரைப் பகைத்தோமோ, அவரைப்பார்க்கிலும் நாம் அதிகமாகத் துன்புறுவோம். 'தீயவை செய்தவர்கள் கெடுதல், ஒருவன் அடி நிழல் போலத் தப்பாது நிகழும்,' என்ற திருவள்ளுவர் தீயவர்க்குத் தீமை செய்தால் செய்தவர்க்கு அவ்விதியிலது என்று சொல்லவில்லை.

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்."

என்றவிடத்து, 'தீயானது தீமையும் நன்மையும் பயக்கலாம். ஆனால், தீமை கெடுதியையே உண்டாக்கும்; நன்மையைத் தாராது,' என்பது குறிப்பிக்கப் பட்டது. தீயின் வெப்பத்தை மந்திர சத்தியால் வெல்லுவாருமுளர். ஆனால், தீய வினையை வெல்லுதல் எவர்க்கும் அரிது. 'தீயினால் சுட்ட புண் ஆறுதல் கூடும்; நாவினால் சொன்ன தீச்சொல் வடுப் போல மாறாதிருக்கும்,' என்பது திருவள்ளுவர் கருத்து. 'உயர்வு என்பதற்கு உயிர், அன்பு. தீமை செய்தவர்க்கும் நன்மை செய்யாமற்போனால், உயர்வு என்பதில்லை,' என்பது அறநூற்கருத்து.

எல்லாப் பிழைக்கும் பாவத்திற்கும் மூலம் சுய நலம் என்பதையும், அதற்குக் காரணம் அறியாமை

என்பதையும் உண்மையாக உணர்ந்தால், தீயவர் களிடமும் நமக்கு இரக்கமும் அன்பும் உண்டாகுமே யொழியப் பகைமை ஏற்படாது. இரக்கம் ஏற்பட் டால், நன்மை செய்யவே நமக்குத் தோன்றும். ஒவ் வொருவரையும் நுட்பமாக ஆராய்ந்தால், அவரவர் உயிரின்கண்ணுள்ள தெய்வ சத்தி நமக்குப் புல னுகும். ஒருவருக்குக் கெட்டதையே நினைவுபடுத்தி ஞல், அவருங் கெடுவார்; அதனுல், நமக்குங் கெடுதி நேரிடும். நன்மையையும் நீதியையும் நினைக்கும்படி ஒருவரைச் செய்தால், அவர் நன்மையையே அடை வார்; நம்மையும் நேசிப்பார்: நமக்கும் நன்மையே விளையும். மனிதருக்குக் கீழ்ப்பட்ட பிராணிகளும், மனிதர் அன்பு செலுத்திஞல், தாமும் அன்பு செலுத்துவதைக் காணலாம். நாய், பூனை முதலிய வற்றை அன்புடன் வளர்ப்பவர்கள் இதனை நன்கு உணர்வார்கள். காட்டில் வாழும் முனிவர்களைக் கொடிய பிராணிகள் வருத்தாதிருப்பதற்குக் கார ணம், அவர்கள் அவைகளிடத்தில் அன்பு செலுத்து வதே என்பர். அன்பு செலுத்துவதில் எதிரிகள் தவருன எண்ணங்கொள்ளாதபடி அடிக்கடி அவர் கள் அறிவைத் திருத்துதல் வேண்டும்.

அன்பு சுயநன்மைக்கும் அவசியமாகும். அது மனத்திற்கு உவகை தந்து, உடம்பிற்குச் சுகத்தை யும் ஆயுளையும், முகத்திற்கு ஒளியையும், பேச்சுக்கு வளத்தையும் வசிகரத்தையும் நல்கும். அன்பிற்கு மாருன செயல்கள் மனத்திற்குத் துன்பத்தையும், உடம்பிற்கு நச்சுத்தன்மையையுந் தரும். அவைகள்

அறிவுச் சத்திகளைப் பெருக்கி உடம்பைச் சின்ன பின்னமாக்கும். அன்பான எண்ணங்கள், பகைவர்களுடைய கெட்ட எண்ணங்கள் நம்மைத் தாக்க வொட்டாது தடுக்கும். வெறுப்பினும் அன்பே பலமான சத்தி. பகைமைக்குப் பகைமை காட்டினால், எரிகிற நெருப்புடன் காற்றும் சேர்ந்தது போல ஆகும். பகைமைக்கு அன்பு காட்டுவது, நெருப்பை நீரினால் அவிப்பதுபோலாகும். அன்பினால் பகையை வெல்லலாம். ஆதலின், திருவள்ளுவர், 'மறத்திற்கும் அஃதே துணை,' என்றார்.

'அன்பில்லாது வாழ்தல் நல்வாழ்க்கை அன்று,' என்று அறிவுறுத்தும் திருவள்ளுவர், 'அது பாலைவனத்திற் பட்டமரம் தளிர்த்தது போலும்,' என்றார். அன்பிலாது வாழ்தல், நடைப்பிணமாய் வாழ்தற்குச் சமானம். அன்பைப் பற்றிப் பிரசங்கம் பண்ணுவதைப்பார்க்கிலும், வாழ்க்கையில் அதனை நடத்திக் காட்டுதலே மக்கட்கு அறிவை ஊட்டுதற்கு வழியாகும். நன்மையைப் பார்த்து மக்கள் நன்மையைச் செய்வார்கள்.

உதவி செய்வதில் உதவி ஏற்பவன் தனக்குத் தானே எப்போதும் உதவி செய்துகொள்ளக்கூடிய நிலையிலிருக்கும்படி செய்தலே நலம். ஏழைகளுக்குப் பசிப்பிணி நீக்குவதோடு தங்களுக்குண்டாகும் பசியைத் தாங்களே நீக்கிக்கொள்ளும்படி அவர்களுக்குத் தொழிலோ, படிப்போ கற்பித்தல் சிறந்தது. ஒவ்வொருவரும் மக்கள் இயல்பறிந்து அன்பு செய்

யும்படி பயிற்றப்படுதல் வேண்டும். அன்பு எல்லாரையும் ஒன்றுக்கும். வெறுப்பு எல்லாரையும் பிரிக்கும். 'தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்.' எல்லாரையும் நேசிக்க நேசிக்க, ஒருவர் கடவுளை நெருங்குவர்; கடவுளோடு தமக்குள்ள ஒற்றுமையை உணர்வர். அதை உணர்ந்தவர் பெருவாழ்விற் கலப்பர். உணராதவர், சிறு வாழ்விற்கழிவர். பெருவாழ்வுறுபவரே நீடித்த பெருஞ்சுகமடைவர். மக்களுள் மிகுதியானவர் இவ்வுண்மையை அறிந்த போதுதான் நாட்டிற்கும் உலகத்திற்கும் நிலைத்த நன்மை உண்டாகும்.

5

அறிவு பெறுதல்

கடவுள் அறிவிக்க உயிர் அறியும். அறிதற்குப் பயன்படுங் கருவிகளை நமக்குக் கடவுள் கொடா திருந்தால், நாம் எதனையும் அறியமாட்டோம்.

"நீ உணர்ந்த நானுணரும் நேசத் தாலோ
அறிவென்றே யெனக்கோர் நாமமிட்டதே."

என்று தாயுமானவர் கூறியபடி, கடவுள் அறிவிக்கவே நாம் அறிகின்றோம். ஆதலின், நமக்கு அறிவுப் பொருள் என்னும் பெயர் வழங்குகிறது. கடவுள் நம்முள் நின்று நமக்கு உணர்ச்சியளியாவிட்டால், நாம் அறிவில்லாத சடப்பொருளுக்குச் சமமாவோம்.

சிறந்த அறிவைப் பெற விரும்புகின்றவர் அறிவின் மூலமாகிய இறைவரையே நாடுதல் வேண்டும். நம் அறிவுக்கு நினைப்பும் மறப்பும் உண்டு, இறைவர் அறிவிற்கு அவை இல்லை. நம் அறிவிலே இறைவர் அறிவு தெளிவாய்க் கலந்திருப்பதை நாம் அறியுங்காலத்தே நமக்கு எல்லா உண்மையும் நன்கு விளங்கும். ஆதலின், பெரியார்,

"நினைப்பு மறப்புமற நின்ற பரஞ்சோதி
தனைப்புலமா என்னறிவிற் சந்திப்ப தெந்நாளோ!"

என்றார்.

செருக்கற்ற உயிர்களின் அறிவுத் தொகுதியில் ஒரு பேரறிவாய் விளங்குபவர் கடவுள் என்னும் கருத்து,

"எவரெனன் பறையிகழ்ந்த அறிவின் றிரளினின்றும்
அறிவொன் றென விளங்கும்."

என்னும் அடிகளில் இனிது உணர்த்தப்பட்டது. இதனுல், கடவுள்பால் அறிவு விளக்கம் வேண்டுகின்றவர்கள் அகந்தை, ஆசை என்பவற்றை ஒழித்து, உண்மை அறிவையே நாட வேண்டும் என்பது அறிதற்பாலது. கடவுள் ஞான வெளியிடை மேவும் உயிர். அவர் தருகின்ற அறிவே மெய்யான விளக்குப் போல்வது. 'அவ்விளக்கின் பயனை நாம் எப்போது பெற முடியும்?' என்று எதிர்பார்த்திருப்பது ஞானிகளின் இயல்பு. அது,

"கைவிளக்கின் பின்னேபோய்க்
காண்பார்போல் மெய்ஞ்ஞான
மெய்விளக்கின் பின்னேபோய்
மெய்காண்ப தெந்நாளோ!"

என்பதால் விளங்கும். கடவுள்பால் நேரே அறிவைப் பெறவேண்டுமானுல், நமது உள்ளத்தினுள்ளே ஒளித்திருந்து நமது கள்ளமெல்லாம் அறியும் வள்ளல் கடவுளென்பதை நாம் உணர வேண்டும். உண்மையை அறிய வேண்டுமென்ற விருப்பந்தவிர வேறு ஒருவித விருப்பமும் நமக்கு இருத்தல் கூடாது.

உண்மையை அறிந்தால் அதன்படியே நடக்க உறுதியான எண்ணங் கொள்ள வேண்டும். நம் அறிவில் கடவுள் இருப்பது போல அவர் அறிவுள் நாம் கலந்து நிற்கும் நிலையை நாம் உண்மையாக விரும்பினால், அவர் நமக்கு அருள் செய்வர். இதனை அந் நிலையை விரும்பிய தாயுமானவர்,

"என்னறிவிற் குள்ளே யிருந்ததுபோல் ஐயாவே!
நின்னறிவுள் நின்னுடன்யான் நிற்கவைத்தல்
[ஆகாதோ?"

என்பதால் அறிக.

அத்தகைய உயர்நிலையை நாம் அடைவது எளிதன்று. எல்லாப் பொருளையும் பார்க்குங்கால் அவற்றிற்கு உள்ளீடாய் அவற்றிற்கு ஆதாரமாயிருக்கும் அளவற்ற பேரறிவுப் பொருளை நினைதல் வேண்டும். அப்படி வழிபடுகின்றவர்களுக்குப் பிறர்க்கு மறைவாயுள்ள நுட்பங்களைக் கடவுள் காட்டுகிறார். அன்பர்களுடைய அறிவில் இன்ப வடிவாய் இருக்கின்ற கடவுள் அவர்களுக்கு உண்மை உணர்த்துகிறார். அவ்வுண்மையை அவர்கள் சொல்லும் உரைகளாலே மற்றவர்கள் அறிதல் கூடும். கடவுளுடைய நேர்த் தொடர்பு இல்லாதவிடத்துக் கடவுள் அருள் பெற்ற அறிஞருடைய உயர்ந்த நூல்களே நமக்கு அறிவுக் களஞ்சியமாய்த் திகழ்கின்றன. ஆனாலும், மனிதர் கையில் அகப்படுகின்ற எதுவும் நாளடைவில் குறைவடைகின்றது. ஆதலால், நம்முடைய தெளிந்த அறிவுகொண்டு நூல்களின்

உண்மையை ஆராய வேண்டுமென்பதைத் திருவள்ளுவர்,

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்று அறிவுறுத்தினர். வாழ்க்கைக்கு வேண்டும் உண்மைகளையெல்லாம் அறிவுறுத்திய அவ்வாசிரியர், எந்த நூலையாவது, எந்த மனிதர் வாக்கையாவது பிரமாணமாக நம்ப வேண்டுமென்று விதி விதிக்க வில்லை. நூல்களை ஆராய வேண்டும். அவற்றை ஆராயுந்தோறும் உண்மைகள் நமக்குப் புதியன புதியனவாகத் தோன்றும். வாழ்நாள் முழுவதும் கற்றலே நன்று என்று அவர் போதிப்பதால், நூலாராய்ச்சியை அவர் புறக்கணிக்கவில்லை. ஆனால், மெய்ப்பொருளாகிய கடவுளை உயிர் கண்டாற்றான், வாழ்க்கைத் துன்பத்திற்குக் காரணமாகிய அறியாமை நீங்கும் என்பதை அவர் நமக்கு அழகாக உணர்த்தியுள்ளார். கடவுளுடைய அருளே நமக்கு எல்லாவற்றையும் காட்டுமாதலால், அதனையே நாம் கண்ணாகக் கொள்ள வேண்டுமென்பதும், உலகம் மறைந்த போதும் அது மறையாமல் நிற்குமென்பதும் நமக்கு அறிவுறுத்தும் தாயுமானவர்,

" மண்ணொடு விண்காட்டி
மறைந்துமறை யாவருளைக்
கண்ணொடுகண் ணாகவென்று
காண்பேன் பராபரமே!"

என்றது காண்க.

அருளோடு கலவாது நமது சிற்றறிவினுலே எதனைப் பார்த்தாலும் அதன் உண்மைத் தன்மையும் தெரியாது; நமது உண்மைத் தன்மையும் நமக்குத் தெரியாது என்பதை அழகாகக் குறிப்பிப்பார்,

" அருளா லெவையும்பா ரென்முன்—அந்தை
அறியாதே சுட்டியென் னறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லால்—கண்ட
என்னையுங் கண்டில னென்னேடி தோழி !"

என்ருர் தாயுமானவர்.

திருவருள் பெற வேண்டுமாயின், நமக்கே நாம் உண்மையாயிருத்தல் வேண்டும். 'பொய் வார்த்தை சொல்லிலோ திருவருட்கு அயலுமாய்ப் புன்மையேன் ஆவன்,' என்ருர் பெரியார். பொய்யர்க்கு அருள் விளங்காது. கடவுள் பொய்யர்க்குப் பொய்யும் மெய்யர்க்கு மெய்யும் ஆவர். மெய்யர்களுடைய உள்ளுணர்ச்சியே மனச்சாட்சி எனப்படும். அது நம்மை நடத்துவதிற் பிழையற்றதாயிருக்கும். அதனை நன்கறிந்த பெரியார்கள் தக்க செயலைத் தக்க நேரத்தில் தக்க முறையிற் செய்வார்கள். களங்கமற்ற உள்ளறிவோடு பகுத்தறிவு கலந்தவிடத்து அது பிரகாசமடையும். சாதாரணமான பகுத்தறிவு சாதாரணமான ஞானத்தைக் கொடுக்கும். அதற்குப் பொய்க் காட்சியான புவனமே புலப்படும். உள்ளறிவாளர்க்கு மெய்க்காட்சியான உயர்நிலை விளங்கும். அவர்கள் சாந்தநிலை அடைந்து ஞானக்கண்ணுல் எல்லாவற்றையும் பார்ப்பார்கள்.

அப்பெரியார் வழிச் செல்லுகின்றவர் சிறு குழந்தையின் மனமுடையவராய் இருக்கவேண்டும். ஒன்றைக் குறித்து ஆராய்வதன் முன் மனத்துப் புகுந்த தப்பெண்ணங்களையும் அவநம்பிக்கைகளையும் அறவே ஒழித்தல் வேண்டும். அகந்தையில் உதிக்கும் அபிப்பிராயங்கள் உண்மையானது உள்ளத்துப் புகாதபடி மனக்கதவை அடைப்பனவாதலால், அவை தற்கொலைத் தன்மையுடையன. சமய அறிவு, அரசியல் அறிவு, நுண்கலை அறிவு முதலிய எல்லாவற்றிற்கும் அவை தடையாகின்றன. உண்மையை எந்நூலினின்றும் எடுத்துக்கொள்ள நாம் பின்வாங்குதல் கூடாது. உண்மையை நாடுகின்றவருக்கு எல்லாப் பக்கத்திலிருந்தும் உண்மை அறிவு மிகுதியாகக் கிடைக்கும். சாதி வேறுபாடுபற்றி, சமய வேறுபாடுபற்றி, தேசவேறுபாடு பற்றி, வேறு காரணம் பற்றி உண்மையை ஒதுக்கிக் கழித்தால், அதன் நன்மைகள் ஒழிவதுடன், நோய், மெலிவு, மரணம் முதலிய தீமைகளும் வந்து சேரும். கடவுளுடைய உண்மையை இன்னுர் தாம் சொல்லவேண்டுமென்று அவர் வரையறுத்து வைக்கவில்லை. தமக்கே உண்மையெல்லாம் தெரியுமென்பவர் அறிஞரல்லர். அவர் கூறுவது, கூவலாமை, குரைகடலாமையைக் 'கூவலோடொக்குமோ கடல்?' என்றது போலாகும். மக்களுக்கு உண்மை போதிப்பவர், தம்மையுந் தம் தலைவரையும் அறிந்து உய்யும் வழியை அறிவுறுத்துதலே சிறப்பாகும். எவ்வடிவும் பூரணமாம் எந்தையார் உருவென்றும், பின்னுமுன்னுமாய் நடுவுமாய்

யாவினும் பெரியதென்னுந் தன்மையாய் எவ்வுயிர்த் திரளையும் இயக்கி மன்னும் தன்னருள் வடிவம் மாபரமனார் வடிவம் என்றும், காக்கும் அவரருட் காட்சியல்லால் ஒரு போக்குமில்லையென்றும், அவ ரருள் கொண்டறிவதல்லால் நெறி வேறில்லை என் றும், பொய்யைப் பொய்யென்றறியும் போதந் தரு வது மெய்யருளென்றும் தெரிந்து நிற்கும் உயிரா னது, தன்னை அறிந்தால், தலைவர்மேற் பற்று வைத் தல் தவிர வேறொன்றையும் பற்றாதென்பது தாயு மானவர் கருத்து. அங்ஙனம் உயிர் அறிவினுக்கறி வாய பொருளைப் பற்றிநின்றால், அகண்ட பரிபூரண ஒளியில் பேரானந்தமுற்று நிற்கும். அதுவே, எல்லா உயிரும் முடிவாகப் பெறுதற்குரியதாதலின், அந்நிலைக்கு உயிர்களைச் செலுத்தாத கல்வி, உயர்ந்த ஞானத்தை நல்காது. ஆனால், அதனைப் பெற்றவர் களுக்குக் கைவாராத எந்த நன்மையும் உலகத்தில் இல்லை.

உயர்ந்த ஞானத்தை நாடுபவர்கள் தூக்கத்தி லுங் கடவுள் உணர்ச்சி உடையவர்களாயிருப்பார் கள்; நல்லொழுக்கத்திற்றிகழ்வார்கள்; பொருந்தா உணவு, மிகுந்த உணவு முதலியவற்றை வெறுப் பார்கள்; ஒழுங்கான வழியில் உடல் வாழ்க்கை நடத்துவார்கள். மிகுந்த தூக்கம் அவர்களுக்கு அவ சியமாய் இராது. அவர்கள் உடம்பும் உள்ளமும் ஒன்றுக்கொன்று உதவியாயிருக்கும். தூங்கும் போதே அவர்கள் உள்ளத்தில் அருளொளி விளங் கும். அவர்கள் நிலையைக் குறித்தே,

"தூங்காமற் றூங்கிச்
சுகப்பெருமான் றின்னிறைவில்
நீங்காமல் நிற்கும்
நிலைபெறவுங் காண்பேனோ!"

என்றார் தாயுமானவர்.

உலகியலிலும் சிலர் தூங்குவதற்குமுன் மனத்திற்கு ஒரு வேலை கொடுத்துத் தூங்கி எழுந்திருக்கும்போது அது பூர்த்தியாயிருப்பதைக் காண்கின்றனர். தூங்குவதற்கு முன் நினைப்பதையே தூங்கும்போதும் மனம் நினைக்கும். உடம்பிற்குத்தான் தூக்கம் தேவை. தூங்கும்போது மனத்தை ஒரு கருத்தினின்று பிற கருத்திற்குத் திருப்புவதற்குப் பிற எண்ணங்கள் அதனுட்புகுவதில்லை. மனம் ஒன்றையே அழுத்தமாக நினைந்துகொண்டிருந்தால், அதற்கு இனமானவற்றைப் புறத்தே இருந்து அஃது இழுத்துக்கொள்ளும். ஆதலால், தூங்கப் போகுமுன் மனத்தைச் சாந்தமாயும் நல்லெண்ணத்துடனும் வைத்துக்கொண்டு எதிர் பார்ப்பதை நினைத்தல் வேண்டும். விழித்தவுடன் வேறொன்றையும் நினையாது எதிர் பார்ப்பதை நினைத்தால், அதனைப் பற்றிய உண்மை நமக்குத் தெளிவாகப் புலனாகும். சிலர் தூக்கநடுவிலேயே தமக்குப் புதுக்கருத்துகள் தோன்றுவதாகச் சொல்லுகின்றனர். காலையில் எழுந்தவுடன் மனம் தெளிவாயிருக்குமாதலால், எதை நாம் பெற விரும்புகின்றோமோ, அதிலே மாத்திரம் மனத்தை அவ்வேளையிற்செலுத்தினால், விரும்

பிய காரியம் நிறைவேறுமென்பர். தூக்கத்திற்கு முன்னும் பின்னும் வேறொன்றையும் எண்ணாது, அளவற்ற மெய்ஞ்ஞானப் பொருளாகிய முதல்வரை உணர்ந்து, உண்மை அறிவினை அவரிடம் வேண்டினால், நாம் விரும்பிய அறிவை அவர் தவறாது அருள் செய்வர் என்பது பெரியார் கருத்து. மெய்யறிவை மெய்ப்பொருளாகிய கடவுளே நமது தகுதிக்குத் தக்கபடி நமக்கு அறிவுறுத்துகின்றார். ஆதலால், நாம் அதனை அவரிடத்தேதான் பெற வேண்டும்.

6

ஆற்றல் வளம்

அறிவு செயலில் வெளிப்படுங்காலை அஃது ஆற்றல் எனப்படும். அறிவின் திறமையினாலேயே மனிதர் தம்மினும் மிகுந்த உடற்பலமுள்ள பிராணிகளை அடக்கியாள்கின்றனர். மனிதர் மிகுந்த ஆற்றலை விரும்பினால், அது சிறந்த அறிவினாற்கிடைப்பது ஆதலின், அறிவிற்கும் ஆற்றலுக்கும் மூலமாகிய ஆண்டவரது இரண்டற்ற தொடர்பையே அவர் நாடுதல் வேண்டும். அத்தொடர்பினை உடையவர்களுக்கு எண்ணியது எண்ணியவாறே கை கூடும். அவர்களைத் தாயுமானவர் 'சங்கற்ப சித்தர்' என்றார். அவர்களைப்பற்றி அவர் கூறுவதாவது, 'சங்கற்ப சித்தர்கள் எக்காலத்திலும் பிறர்க்கு உதவுவார்கள்; இன்சொல்லையன்றிக் கடுஞ்சொல் என்றும் பகரார்கள்; குற்றமாகிய பொய்யினைச் சொல்லார்கள். உயிர்க்கிரங்குவார்கள்; கொலைகள் பயிலமாட்டார்கள். அவர்கள் நினைத்ததை நினைத்தபடியே இறைவர் அருள் புரிவாராதலின், அவர்கள் உள்ளத்தில் அவர் உறைகின்ற கற்பகமரமாவர்.

சித்தர்கள் இயற்கை நுட்பங்களை நன்கு ஆய்ந்து, அதிசயமான சித்துகளை முற்காலத்தில் மிகுதியாகச் செய்தார்கள். அற்புதங்களென்பன இயற்கைக்கு மாறானவையல்ல. சாதாரணமாக நமது அறிவுக்கு உட்பட்ட இயற்கைச் சட்டங்களே

நமக்குத் தெரியும். அவற்றிற்கு மேற்பட்ட உயர்ந்த சட்டங்கள் கடவுள் தொடர்புடையவர்களுக்கே அறிவுறுத்தப்படும். அவற்றிற்கு ஏற்பச் சித்தர்கள் செய்யும் செயல் பொது மக்களுக்கு அற்புதமாய்த் தோன்றும். அற்புதங்கள் ஒரு தேசத்திற்கும் ஒரு காலத்திற்கும் உரியன அல்ல. கடவுட்டன்மை வாய்ந்தவர்களால் தங்கள் உயிர் ஆற்றலை (ஆன்ம சத்தி) கொண்டு எப்போதும் அவை இயற்றப்படுவனவே. பிற உலோகங்களைப் பொன்னாக்க முடியுமென்பது இக்கால அறிவியல் நூலார் கண்ட உண்மை. ஆனால், அவர்கள் சித்தர்களது எளிய முறையை இன்னுங்காணவில்லை. மந்திர சத்தி என்பது சொல்லின் வழியாக வெளிப்பட்டு வேலை செய்யும் நினைவாற்றலே. யோகப்பயிற்சியால் உடல் வன்மையையும் அறிவாற்றலையும் பெறலாம் என்பது யோக நூல்களிற் சட்டமுறையாகக் காட்டப்பட்டிருக்கிறது. யோகத்திற்சிறந்த பகுதியாகிய 'தியானம்' என்பது ஐம்பொறியையும் அடக்கிக் கடவுளை இடைவிடாது நினைத்தலாகும். 'சமாதி' என்பது மனம் ஒடுங்கி நினைத்த தியானப் பொருளோடு இரண்டறக் கலந்து நிற்றல். அகண்ட வியாபகப் பொருளோடு கலப்புற்ற பெரியார்க்கு உலகில் இயலாததொன்றுமில்லை. அவர்கள் 'எல்லாம் இறைவன் செயலே!' என்று எப்போதுங் கருதுவார்கள் என்பது,

'சந்ததமும் எனதுசெயல்
நினதுசெயல்; யானெனுந்

தன்மைநினை யன்றி யில்லாத்
தன்மையால் வேறலேன்.'

என்னும் அருள் வாக்கியங்களால் இனிது விளங்கும். அத்தகைய பெரியாரது உயிர் ஆற்றல் கொடிய விலங்குகளின் கோபத்தையும் சாந்தப்படுத்தி, மேலாகவுங் கீழாகவுமுள்ள எல்லா உயிர்களையும் ஒற்றுமைப்படுத்தும் திறமை உடையது என்பதைத் தாயுமானவர் தம் மௌனகுருவின் உயர்நிலையைக் கூறுமிடத்து நமக்கு அழகாகத் தெரிவிக்கின்றார்: அவர் கருத்து வருமாறு :

"குருவே, நீ கண்ணுற்பார்த்த போது காட்டிலுள்ள புலியானது பசுவோடு இணக்கமாய் உடன் திரியும் : மதங்கொண்ட யானையானது நீ கையினுற் குறிப்புக்காட்டியவுடன் நெருப்பிலிடுதற்குப் பெரிய கட்டைகளை மிகுதியும் ஏந்தி வரும் ; காமதேனுவாகிய விண்ணவர் பசு, உன் பொன்னடியைத் தொழுது, உணவு ஆயத்தமாயிருக்கிறதென்று உனக்குத் தெரிவிக்கும். உலகத்திலுள்ள புரவலரும், பாவலரும் 'தவவேந்தன்' என்று உன்னை வழுத்தி, 'வெற்றியொடு காக்க!' என வாழ்த்துவர். அறிவும் அருளும் நிறைந்த உனது திருமுகத்தைப் பார்த்த அளவிலே நவநாத சித்தர்களும் உன் நட்பினை விரும்புவர். சுகர், வாமதேவர் முதலிய ஞானியரும் உன்னை மதித்துப் புகழ்வர். விண்ணவரும் மண்ணவரும் எதிர் வணங்கித் தொழுதற்குரிய நின் பெருமை சொல்ல எளிதாகுமோ ?"

கடவுளது அருட்சத்தி மனிதர்களது முயற்சிக்குத் தக்கபடி வெவ்வேறு அளவில் அவர்கள் உள்ளத்திற் பதியும். அது பதிவதற்குத் தக்கபடி ஆற்றலும் வேறுபடும். எல்லாவற்றிற்கும் அடிப்படையாக உண்மையுங்கருணையுமே வேண்டும். பொது மக்கள் அபிப்பிராயம் நல்லதாயிருந்தாலும் கெட்டதாயிருந்தாலும், உண்மை நெறியிலேயே நாம் சென்ருல் நமது வாழ்க்கை திறமுடையதாகும். மற்றவர்கள் கருத்துக்குத்தக்கபடி நாம் வாழ முயன்ருல், அஃது அறிவுக்கு முற்றிலும் பொருத்தமாயிராது; இயற்கைக்கு மாருகவுமிருக்கும். ஒருவன் வாழ்க்கை என்பது அவனையும் கடவுளையும் பொறுத்த செய்தியாகும். மற்றவர்களைப் போல நாமும் நடக்க வேண்டுமென்றெண்ணி அதற்காகப் போலி வேடங்கள் புனைதல், ஒரு சமயத்தில் நகைப்பிற்கிடமாகும். இயற்கையிலுள்ள நல்ல மரங்களையும் செடிகளையும் பறவைகளையும் ஆராய்ந்து பார்த்தால், அவைகளின் இயற்கை வாழ்வு நமக்குப் பல உண்மைகளைக் கற்பிக்கும். சிலர் தம்முடைய சுயாதீனத்தை இழந்து, பிறர் சொல்லுவதைக் கேட்டு நடக்கமுயன்று, தம்முடைய இயற்கைச் சத்திக்கு ஏற்ற உயர்வாழ்வைக் கைவிடுகின்றனர். வழக்கத்துக்கும் கட்டுப்பாடுகளுக்கும் நமது சுயாதினத்தைக் கொடுத்துவிடக் கூடாது. நம்மைச் சூழ்ந்துள்ள சந்தர்ப்பங்களுக்கு உண்மைக்கு மாருக நாம் அடிமையாகக் கூடாது. நம் ஆற்றலினுல் நமக்கேற்ற சந்தர்ப்பங்களை நாம் உண்டாக்கிக் கொள்ள வேண்டும். சிலர் பரம்பரையாக வந்துள்ள

இயல்புகளையும் பழக்கங்களையும் மாற்ற முடியா தென்பர். மாற்ற முடியாதென்று நினைத்தால், அவை மாறமாட்டா. இறைவரோடு ஒற்றுமைப்பட்டு அவரது அளவற்ற ஆற்றல்கள் நம் வழியாகப்பிரகாசிக்க இடங்கொடுத்தால், நமது பரம்பரைக் குறைகளெல்லாம் படிப்படியாகக் குறைந்து, முற்றிலும் ஒழிந்து போம்; பரம்பரைத்தீய இயல்புகளும் நம்மைப் பாதிக்கமாட்டா.

அறிவு வளர்ச்சிக்குரிய எந்தக் கலையை ஒருவன் பயின்றாலும், அதில் மேம்பாடடையவேண்டுமானால், தன் உள்ளத்தினுள்ளே இருக்கும் தெய்விக ஆற்றலோடு அவன் சம்பந்தப்பட வேண்டும். சித்திரம் எழுதும் திறனோ, சிற்பம் அமைக்கும் நயமோ, கேட்டார்ப் பிணிக்கும் உரை வன்மையோ, உள்ளமுருக்கும் பாடலோ, இன்னிசையோ ஆகிய இவை எல்லாம் இறைவரது அருளாற்றலில் துவைக்கப்பெற்றால், எக்காலத்தும் அழியாத நிலை எய்தும். அருள் நூல்கள் ஆனந்த ஊற்றாய் விளங்குதற்குக் காரணமும் அதுவே. நூலியற்றுபவர் தமது உள்ளத்தில் உண்மையென்று கண்டவற்றை அச்சமில்லாமல் ஆற்றலோடு எழுத வேண்டும். ஒருவன் எழுத்தே அவன் உள்ளத்தின் படமாகும். எழுதியிருப்பதைப்பார்க்கிலும் குறிப்பால் உணரத்தக்கதே அதிகமாயிருத்தல் வேண்டும். குறிப்பின் சிறப்பிற்குத் தக்கபடி நூல் உயர்வாகக் கருதப்படும். நூலின் கருத்துகள் சிலர் மனத்திலாவது நன்றாகப் பதியுமானால், அவை பலர்க்

கும் பரவுதல் கூடும். ஔவையார் தம் பாட்டின் ஆற்றலை உணர்ந்தே, 'என்றுங் கிழியாதென் பாட்டு,' என்றார். அருள் நூல்களின் நயங்கண்ட ஒருவர்,

"வாக்குக் கருணகிரி ; வாதவூ ரன்கனிவு ;
நாக்குத் திருஞான சம்பந்தர் ; — நோக்கிற்கு
நற்கீர தேவர் : நயத்தினிற் சுந்தரர் ;
சொற்குறுதிக் கப்பர்எனச் சொல்."

என்றார்.

இதன் கருத்தாவது, 'துள்ளலோசை தூங்கலோசை முதலியனவுடைய சந்த இன்பங்களை நமக்கு ஊட்டி முருகன்பால் நமது மனத்தைப் பிணிப்பன அருணகிரி நாதர் இயற்றிய திருப்புகழ் முதலியன. மாணிக்கவாசகரது திருவாசகம் கல்மனத்தையுங் கரைத்துக் கடவுளோடு ஒன்றுபடுத்துவது. திருஞான சம்பந்தர் தேவாரம் பெருமிதமான உயர்நடை உடையது. நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை முதலியன கம்பிரமான ஓசை நயமுடையவை. சுந்தரமூர்த்திகள் திருவாக்கு ஆண்டவரிடத்தும் நகைச்சுவையை உண்டாக்குவது. அப்பர் அருள் வாக்கு உறுதியான உண்மையைப் போதிப்பது,' என்பதாம். இவ்வாறே ஆழ்வார்கள் பாடல்களில் நம்மாழ்வார் திருவாய்மொழி உண்மையுமினிமையுமுடையது. திருமங்கை மன்னர் வாக்குப் பெருமிதம் பயில்வது. ஆண்டாள் திருமொழி அன்பை விளைவிப்பது. பிறவும் கண்டுகொள்க.

கட்டுப்பாடான விதிகளைத் தழுவி நூல் எழுத வருந்த வேண்டுவதில்லை. உள்ளத்தின் உயர்வையும் உள்ளங்கவரும் கள்வரின் பெருமையையும் இனிய எளியமுறையில் உணர்த்தும் நூலே தக்க நூலாகும். உண்மைநயமறியாத கண்டனங்களை நூலியற்றுபவர் பொருட்படுத்த வேண்டுவதில்லை. சமயபோதனை செய்பவர் சமயப் பரம்பொருளாகிய கடவுள்பாற் கலந்த மனமுடையராய், உண்மையைத் தெளிவாக யாவர்க்கும் உணர்த்தும் ஆர்வமுடையராய்த் தாம் கூறுங்கருத்துகளை அன்பர்கள் அனுபவ வாயிலாக விளக்கினல், பொதுமக்கள் பெரும்பயன் அடைவார்கள். மதத்தின் அமுக்கியமான பகுதிகளை வேண்டாரிடத்து நலிந்து வற்புறுத்துதல், மக்கள் மதத்தை வெறுக்கச் செய்வதாகும். அங்ஙனம் செய்வார் பேச்சு, ஆற்றல் இழக்கும். மரத்தில் உரிய காலத்தில் இலை உதிர்வது போல, அவசியமில்லாத பழங் கொள்கைகள் கழிந்து போதற்குரியனவே. புது முறையில் புது ஆற்றலுடன் சமயநுட்பங்களை விளக்குதல் புதுத்தளிர்கள் தோன்றி மிளிர்வதை யொக்கும். மரத்தின் வேர்களே முக்கியமானவை. வேர்களையும் சருகுகளையும் ஒன்றுபோல எண்ணுதல் கூடாது. 'நூல்களெல்லாம் பரம்பொருளின் சுவாசம்,' என்று உபநிடதம் கூறுகின்றபடி சமய போதனையானது கடவுளின் சுவாசத்தை வீசிக் கதியற்றுக் கிடக்கும் உயிர்களையெல்லாம் கதித்தெழும்படி செய்தல் வேண்டும். புறச்சாட்சியங்களினும் அக அனுபவங்களே கடவுள் நம்பிக்கையை வலி

யுறுத்தும். இருதய சுத்தமுள்ள இடத்தில் அக அனுபவம் சிறந்து விளங்கும். அது விளங்கவே, உள்ளமானது பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தக் கோவிலாகும்.

7

சாந்தநிலை

சான்றோருடைய உள்ளம் அலையற்ற நீர் நிலை போல அமைதியாயிருக்கும். அருட்கண்ணால் உடம்பினையும் உலகத்தையும் தக்கபடி தெரிந்துகொண்டால், சாந்தநிலை தானே அமையும். ஆயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் உலகெங்குஞ் சென்று வேடிக்கை விளையாடல் பார்த்து மனக்கவலையைத் திர்க்க முயன்றும், சாந்தநிலை அடையாதிருக்கின்றனர்; காரணம் யாதெனில், சாந்தம் இல்லாத இடத்தில் அதைத் தேடுகின்றனர். அது நமக்கு வெளியே இல்லை; நமது உள்ளத்திலேதான் இருக்கிறது. நமது உடம்பின் தேவைகளைப் பெருக்கிக்கொள்ளாமல் உயிர் வளர்ச்சிக்கு ஏற்ற அளவு ஒழுங்கு படுத்திக்கொண்டால், அல்லல் மிகுதியாக ஏற்படாது. உடம்பிற்கு வேண்டுவனவற்றை அதிகப்படுத்திக் கொண்டால், அவற்றை நாடுவதிலே காலங்கழிவதுடன், அவை கிடையாவிடத்து நோயும் துன்பமும் கவலையும் விளையும், நமது உள்ளத்தைப் புற உலகில் மிகுதியாகத் திரிய விட்டால், அது சச்சரவு, பொறுமை, வீணாசை முதலிய அழுக்குகளை வாரிக் கொண்டு வரும். சாந்தநிலை விரும்புபவர் தீய கருத்துகளையும் இழிந்த உணர்ச்சிகளையும் அறவே ஒழித்துக் குழந்தையைப் போன்ற கபடமற்ற மனநிலை உடையவராதல் வேண்டும். பெரியார்கள் கடவுளைச் 'சாந்தபத இயற்கை' என்பர். விருப்பும் வெறுப்

பும், போக்கும் வரவும் இல்லாத பூரணப்பொருள் எவ்வாறு பற்றற்று விளங்குகின்றதோ, அவ்வாறு அதனைப்பற்றிக்கொண்டு பிற பொருள்களில் பற்றில்லாது வாழ்கின்ற பெரியாருள்ளத்தில் மகிழ்ச்சி எப்போதும் ததும்பிக்கொண்டிருக்கும். எவ்வகையிலும் இறைவர் தங்களைப் பாதுகாப்பார் என்ற உணர்ச்சி நிலைபெற்ற சாந்தத்தை அவர்கட்குக் கொடுக்கும். உரியது தமக்கு வரத்தவருது என்ற எண்ணம் அவர்கள் உள்ளத்திற்குடிகொண்டிருப்பதால், அவர்கள் எல்லாரோடும் சமாதானமாகவே வாழ்வார்கள். மக்களுடைய குறைபாடுகள் அவர்களுக்கு நன்ருகத் தெரியுமாதலால், மக்கள் தவறு செய்தலைக்கண்டு அவர்கள் அதிருப்தியடைய மாட்டார்கள். மக்கள் இயல்பை நன்ருக அறிந்தவர்களுக்கு நண்பர்களாவது பகைவர்களாவது தப்புச் சொன்னுலும் தவருக நடந்தாலும் கோபம் வாராது. அதனுல், அவர்கள் இடர்ப்படவும் மாட்டார்கள். பெரியார்களுக்கு உள்ளே துயரமும், வெளியே மகிழ்ச்சியுங் காட்டுகின்றவர் இன்னுர் என்பது தெரியும். வஞ்சகர்களைக்கண்டு அவர்கள் நகையாடுவார்களே ஒழியச் சினங்கொள்ளார்கள்.

நிலையில்லாதவை இவை, நிலையானவை இவை என்று உள்ளபடி உணர்கின்றவர்களுக்குத் தமக்காவது பிறர்க்காவது மரணம்வந்தால், வருத்தம்தோன்ருது. முத்துச்சிப்பியின் ஓடு போவது போல உடம்பு போனுலும் முத்துப் போல உயிர் நிலைத்திருக்குமென்

பதைப் பெரியார் அறிவர். உடம்பின் உதவி இன்றி உயிரும் உயிரும் கலந்துகொள்ளலாம் என்பதை அறிகின்றவர்களுக்கு உடம்பு நீக்கத்தால் துயர் உண்டாகாது

முற்காலங்களில் அரசர் முனிவர் முதலியவர் இன்னல் ஏற்பட்ட காலைக் கடவுளுடைய உதவியை நேரே நாடி உறுதியான உதவிகளைப் பெற்றனரென்பது பொய்யன்று. தேவர்கள் அக்காலத்தில் மக்களொடு பேசினார்கள். அவர்களும் உயர்நிலையிலுள்ள உயிர்களே. மனத்தில் சாந்தமும் தூய்மையுமிருந்தால், அவற்றையுடைய விண்ணவர்கள் நமது விருப்பப்படி நமக்குத் தோன்றி அருள் புரிவார்கள். இப்போதுள்ளவர்கள் உள்ளப்பயிற்சியை நாடாது தேவர்கள் வரக்கூடிய வாயில்களை அடைத்து வைத்திருக்கின்றார்கள். ஆதலால், அவர்களால் பெறக்கூடிய உதவியும் ஆதரவும் இல்லாது ஒழிகின்றன. மரணத்தின்பின் உள்ள உயிர்நிலையை ஆய்ந்தறியும் மேலை நாட்டு அறிஞர்கள், இறந்த ஆவியை வரவழைத்துப் பேசலாமென்பதைக் கண்டிருக்கின்றார்கள்.

மனிதர்கள் சாந்தமடைவதற்குச் சித்தர்கள் போன்ற அருளாற்றல் உடையவர்களுடைய உதவி மிகவும் அவசியம். ஆற்றலுடையவன், அகிலத்திலுள்ள பெரிய சத்தி பீடத்தோடு ஒற்றுமைப்பட்டவன். அவன் எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஆற்றலைத் தன்பால் இழுக்கின்றான். அவன் உள்ளத்தி

லிருந்து வெளியே போகும் நினைவுகள் ஆற்றலுடை-யவையாகவே இருக்கும். உண்மை ஆற்றலுடையவனைப் பார்ப்பதனால் அச்சம் ஊக்கமாயும், அவநம்பிக்கை நம்பிக்கையாயும், பலவீனம் பலமாயும், துக்கம் மகிழ்ச்சியாயும் மாறும். அவர்களுக்கு அச்சம் என்பது உண்டாகாது. பல வகை இன்னல்களால் அச்சமும், அச்சத்தால் கவலையும் கேடும் ஊக்கக் குறைவும் ஏற்படுகின்றன. கடவுள் திருவருளையே பொருளாகக் கருதுகின்றவர் வறுமை, பட்டினி, பொது மக்களின் அவச்சொல் என்பவற்றைப் பொருட்படுத்தார். கடவுள் தவருது காப்பார் என்னும் உணர்ச்சி குதூகலத்தையும் வெற்றியையும் கொடுக்கும். இது பற்றியே, 'நல்லவர்களுக்கு எல்லாம் நன்மையாகவே விளையும்,' என்னும் பழமொழி ஏற்பட்டது. அறிவுக்கறிவாகிய பரம்பொருளை நம்பாமல், நிலையற்ற சடப்பொருளை நம்பினல், அவநம்பிக்கையும் பலவினமும் ஏற்படும். பரம்பொருளோடு ஒற்றித்து நின்ருல், அதுவே முழு அமைதியைக் கொடுக்கும். ஆண்டவர் அருளால் உரிய காலத்தில் நமக்குரியது வருமென்று மனம் சாந்தமடைவதே நிலைவரமான பூரண சாந்தத்திற்கு ஏதுவாகும்.

8

செல்வ வளம்

அளவற்ற பெருவளப் பொருளோடு அத்துவித முற்று வாழ்பவர் எண்ணிய பொருளெல்லாம் எளிதிற் பெறுவர். வேண்டுவார்க்கு வேண்டுவதை விமலர் கொடுத்தருள்வர். வேண்டத்தக்க தகுதியை நாம் உடையவராதல் வேண்டும். எல்லாம் வல்ல இறைவர்பால் தமக்கு வேண்டுவனவற்றைப் பெறலாமென்னும் மனந்தளரா உறுதியுடையார்க்குக் கருதியது எதுவும் தவறுவதில்லை. 'பொன்னும் மெய்ப் பொருளுந்தருவான்; போகமும் திருவும் புணர்ப்பான்.' என்றதனுலே, கடவுள் தம் அன்பர்க்கு ஞானமும் வீடும் மாத்திரமல்லாமல், பொன்னும் போகமும் அவர்கள் விரும்பியபடி அருள் செய்கின்ருராதலால், சமயநெறியில் நிற்பவர்கள் வறுமையிலும் துறவிலும் இருக்க வேண்டுவதில்லை. நன்ருக உலகில் வாழ்வதற்கு யாவர்க்கும் செல்வம் வேண்டுவதே. நன்முயற்சியுடையவருக்குக் களஞ்சியம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. தேவைக்கு வேண்டுங்கொடை உண்டு. பெருஞ்செல்வம் வேண்டுமென்று பேராசைப்படுதல் கூடாது. இறைவரிடம் நாம் வேண்டுவது அறிவுக்குப் பொருத்தமானதாகவும் அவசியமானதாகவும் இருக்க வேண்டும்.

வேலை கிடையாமலிருந்தால், அதைப்பற்றிய அச்சம் மனத்தில் இருத்தல் கூடாது. கிடைக்கின்ற

வேலை ஒருவர் தகுதிக்குத் தாழ்வாய் இருந்தாலும், குற்றமற்றதாயின், அதனைக் கடவுட்கொடையாக ஏற்று, செவ்வையாகச் செய்வாராகுல், அஃது உயர்ந்த வேலைக்கு ஒரு படியாகும். சரியான நேரத்தில் சரியான முறையில் வேலையைச் சரியாகச் செய்தால், அதுவே வெற்றிக்கு வழி காட்டியாகும். நினைவின் ஆற்றலால் எண்ணியவற்றை எண்ணிய முறையில் அடையலாம் என்பது சட்டமாதலின், உயர்ந்த நோக்கத்தை ஒருவர் இடைவிடாது எண்ணிக்கொண்டிருத்தல் வேண்டும். அதுகாரணமாகக் கிடைத்த வேலையை அசட்டையாகச் செய்தல் கூடாது. கிடைத்ததொன்றை ஒழுங்காகச் செய்யாதவிடத்து அது தாழ்வை உண்டு பண்ணுதல் கூடும். கெட்ட காலம் வந்தால், அதனுல் ஊக்கக் குறைவு படாமல், நல்ல காலம் வருமென்று எப்போதும் எதிர்பார்த்திருக்க வேண்டும். குறை கூறுவதில் நேரம் போக்குதல் கூடாது. ஒரு வேலையைச் செவ்வையாய்ச் செய்வதற்குப் படிப்பதோடு அதனுல் விளையும் பயனுக்காக அமைதியாகவும், மெதுவாகவும, உறுதியாகவுங்காத்திருக்கப் பழகுதல்வேண்டும். தமக்கும் பிறர்க்கும் பயன் தரக்கூடிய காரியத்தைத் திருவருட்டுணைகொண்டு செய்து முடிக்கலாமென்று முற்றிலும் நம்பி எதிர்பார்த்து அச்சமில்லாது முயன்ருல், அதை அடைதற்குரிய வழி விரைவில் திறக்கும். அதை அனுபவத்தில் பலர் கண்டிருக்கின்றனர். பாவனை என்பது பொய்யானதன்று; மனத்தில் பாவனை செய்வதே அனுபவத்தில் வருதல் கூடும்.

பாவனை செய்வதென்பது ஆசைப்பட்டு வருந்துவ தன்று; மற்றவர்களைப் பார்த்துப் பொருமைப்படு வதுமன்று. 'உள்ளுவ தெல்லாம் உயர் வுள்ளல்,' என்று திருவள்ளுவர் கூறியபடி, கீழ் நிலையிலிருந் தாலும் மேலான நோக்கங்களை முடிக்க எண்ணு வதே பாவனை. துன்பம் வருங்காலத்தில் அதனைப் பார்த்து நகைக்க வேண்டுமென்று கூறினர். 'கரடி யின் கையிலிருக்கும் போதும் அதன் முகத்தைப் பார்த்துச் சிரிப்பது நல்லது,' என்றூர் ஒரு பெரியார். அச்சமும் கலக்கமுமின்றி அமைதியான நல்லறி வோடு முயன்ருல், இங்குமங்கும் ஓடாமல் நாம் விரும்புகின்றவை நாம் இருக்குமிடத்திற்கே வரும் படி செய்துகொள்ளலாம். நினைவின் வலிமை அறி யாத பவர் உலகில் அனுபவத்திற்குப் பொருத்த மானதே சரியென்று பேசுகின்றனர். கடவுள் அரு ளிலும் எண்ணத்தின் ஆற்றலிலும் நம்பிக்கை இல் லாது அனுபவம் அனுபவம் என்று பேசுகின்றவர் உண்மையில் அனுபவநெறியில் நில்லாதவராவர்.

உலகச் செல்வம் ஓரளவிற்கு வேண்டுவதே. எனினும், தமக்கும் பிறர்க்கும் பயனில்லாது அதை மிகுதியாகச் சேர்ப்பதிலேயே ஊன்றிய கருத்துடை யவர் உண்மை வாழ்க்கையின் அடிப்படையை அறி யாதவராவர். அவர் சடப்பொருளுக்கே அடிமையா கின்றனர். செல்வத்திற்குத் தாம் அதிகாரி என்று சொல்லிக்கொண்டு, அதற்குத் தம்மீது அதி காரம் கொடுத்து, அதன் கீழ் அடங்கி, அதற்கு

அவர் அடிமையாயிருக்கின்றனர். நன்மை பயவாத செல்வரது வாழ்க்கை பயனற்ற வெற்று வாழ்க்கையேயாகும். இவ்வுடம்பை விட்டுப் போகுங் காலை தாம் சேர்த்து வைத்ததில் ஓர் அணுக் கூடத் தம்மோடு கொண்டுபோக முடியாமையால், அவர் ஏழைத்தன்மையோடு மறுமைக்குச் செல்லுவர். அன்பான செயல்கள், நல்லொழுக்கமுறைகள், ஆண்டவரருளிற்கலந்த உயிராற்றல்கள் என்பவைகளே மனிதரது நிரந்தரமான அகவாழ்க்கையின் உண்மைச் செல்வங்களாகும். உலகச் செல்வத்தைப் பெரிதாகப் பாராட்டுகின்றவர்களுக்கு இந்த அழியாச் செல்வங்கள் கிடைக்கமாட்டா. உத்தமக் குணங்களெல்லாம் உலோபத்தால் அழியுமென்பர். தாமும் அனுபவியாது, தக்கவர்க்கும் அவர் வேண்டியதொன்றைக் கொடாத இயல்பினையுடையாரது பெருஞ்செல்வம் ஒரு நோயாகும் என்றார் திருவள்ளுவர். உலோபப் பழக்கம் இவ்வுடம்போடு போகாது; மற்றப் பிறவிகளிலும் ஒருவரைத் துன்புறுத்தும். பொருளாசை மிக்கவர், மறுமையிலும் பொருளாசையுடையவராய்ப் பொருளுங்கிடைக்கப்பெறாமல் நல்லெண்ணங்களுமில்லாமல், சித்திரவதையுற்றவர்போல்வர். உயரியவாழ்க்கை வாழ்பவர் அளவுக்கு மிஞ்சிய எதையும் விரும்பாததுபோல, பொருளையும் அளவுக்குமிஞ்சிச் சேர்த்துவைக்க மாட்டார். உட்செல்வமுடையவர் புறச்செல்வத்தைப் பேணுவதில் வாழ்நாளை வீணாகக் கழிக்கமாட்டார். பணத்தையே பெரிதாகக் கருதுகின்றவர் உயிர்க்கு உறுதியைக் கைவிடுவாராதலால்,

பணக்காரர் வீடடைதல் கடினமென்ருர் இயேசுநாதர். பணப்பித்து ஒரு வகையான நோய். ஓர் அளவுக்கு மேற்பட்டால், அஃது உதவியாய் இல்லாமல், இடைஞ்சலாகிவிடும். 'இறைத்த கிணறு ஊறும்,' என்றபடி கடவுளோடு ஒற்றுமைப்பட்டு நல்ல வழியிற்பணத்தைச் செலவிடுவது, மேலும்மேலும் பணம் வந்துகொண்டிருப்பதற்கு ஒரு வழியாகும். மனத் திருப்தி இல்லாத பணக்காரரினும் மனநிறைவுடைய எளியவரே செல்வராவர். பயனில்லாத செல்வம் உண்மை அனுபவத்தைக் குறைத்துத் தீய வழிகளில் விரயமாகும். செல்வர்கள் தங்கள் பொருட்செல்வத்தோடு பணிவும் ஒழுக்கமுமாகிய அகச்செல்வங்களையும் உடையவராயின், வாசனையுடைய பொன் மலர் போலப் புகழுடைவார்கள்.

9

உடல் நலம்

உயிர்க்குறுதி பயக்கும் உயர்வாழ்க்கைக்கு உடல் நலம் அத்தியவாசியமாகும்.

> ' உடம்பா ரழியில் உயிரா ரழிவர் ;
> திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார் ,'

என்ருர் திருமூலர். உடம்பில் சேர்கின்ற பொருள்கள் குணத்தைப் பாதிப்பதால், உயர் வாழ்க்கைக்குத் தக்க உணவுகளை உரிய நேரத்தில் உரிய முறையில் உட்கொள்ளல் வேண்டும். கள்ளானது அறிவை மயக்குவதுபோல, ஊன் தீய உணர்ச்சிகளைப் பலப்படுத்தும். புளிப்பு மிகுந்தால் காம உணர்ச்சியும், எரிப்பு மிகுந்தால் கோப உணர்ச்சியும், எவ்வகை உணவு மிகுந்தாலும் சோம்பலும் நோயும் உண்டாகும். ஆதலின், 'மாறுபாடு இல்லாத உணவுகளைப் பசியுள்ள நேரத்தில் செரிக்கும் அளவில் உண்ணவேண்டும்,' என்று திருவள்ளுவர் விதித்தனர். சித்தர்களும் யோகிகளும் சிறந்த சுகாதார உணவு முறைகளையும் உடற்சுத்தி முறைகளையும் அழகாக வகுத்திருப்பதுடன் உடம்பு நெடுநாள் நீடித்துத் தவத்திற்குப் பயன்படும் வண்ணம் காயசித்தி தரத் தக்க கல்பங்களை ஆதியில் பயன்படுத்தினுர்கள். அதனுல், நூற்றுக்கணக்கான ஆண்டுகள் அவர்கள் நிலவுலகில் வாழ்ந்து வந்தார்கள்.

உடம்பானது எண்ணத்தைப் பாதிப்பது போலவே எண்ணமும் உடம்பைப் பாதிப்பது உண்டு. உடம்பில் பற்று வையாமல் உயிர்க்குயிராகிய அளவற்ற பரம்பொருளொடு தொடர்புற்ற பெரியார்கள், உடலுக்கு வரும் ஊனங்களால் சிறிதும் பாதிக்கப் படுவதில்லை. எதனை அருந்தினாலும், அருந்திய பொருள் அவர்கள் உள்ளத்தைப்பாதிப்பதில்லை. நச்சுத்தன்மையான பொருளை உட்கொண்டும், அதனால் பாதிக்கப்படாமல் இருந்தவர் பலர். அத்தகையார் உடம்புக்கு வேருகத் தம்மை எண்ணியவர் ஆவர். பரம்பொருளோடு ஒற்றித்து நிற்பவர்களுடைய உடம்பில் நோய் தங்காது. தெளிந்த அறிவுடைய அவர்கள் உள்ளத்தையாவது உடம்பையாவது தீய உணர்ச்சிகள் பாதிக்கமாட்டா. திடீரென்று ஒரு துக்கமான செய்தியைக் கேட்டதும் நாம் முகம் வெளுத்து நடுநடுங்கித் தளர்வதுபோலப் பெரியார்கள் தளர்வதில்லை. அவர்களுக்கு அச்சம், கோபம், கவலை, பொருமை முதலிய உணர்ச்சிகள் இல்லை. நாம் அவர்களைப்போல உயர்நிலையை அடைதல் வேண்டும்.

உணர்ச்சிகள் உடம்பைத் தாக்குமுறையையும், தீய மன இயல்புகளால் உடம்பில் நோய்கள் உண்டாகின்ற தன்மையையும் ஆராய்ச்சி செய்து, உடல் நலம் விரும்புகின்றவர் தமது உள்ளத்தைச் செவ்வையாக வைத்துக்கொள்ளப் பழகுதல் வேண்டும். அச்சம் அதிகமானுல், சிலர்க்கு உடம்பை அசைத்தல் கூட முடியாது. கோபத்தினுல் தலை வலி உண்டாவ

துடன், நச்சுத்தன்மையும் ஏற்படுகின்றது. கோபம் மிகுந்த தாய் ஒருத்தி, தன் குழந்தைக்குப் பால் கொடுக்கவே, கோபத்தால் விடத்தன்மையுற்ற பாலைக் குடித்துக் குழந்தை இறந்துபோயிற்று. அச்சமும் கவலையும் உடம்பில் உயிர்ச் சத்துக்கள் உண்டாகும் வழிகளை அடைக்கின்றன. குற்றத்தை மன்னிக்காத கோபங்காரணமாக வாத நோய் வகைகள் ஏற்படுகின்றனவாம். கோப உணர்ச்சி, காம உணர்ச்சி, குற்ற உணர்ச்சி உடையவர்களது வேர்வையையாவது அல்லது உமிழ் நீரையாவது ஆய்ந்து பார்த்தால், அவைகளில் வெவ்வேறு தீய இயல்புகள் காணப்படும். அவற்றை ஆராய்ந்து இன்னாருக்கு இன்ன உணர்ச்சி உண்டென்பதைக் கூறுதல் கூடும். புயல்கள் போன்ற உணர்ச்சிகளால் உடம்பிலே கருவிகள் தங்கள் கடமைகளைச் செய்யவொட்டாமல் தடைகள் ஏற்படுகின்றன. நாளடைவில் அவை நோயை உண்டாக்கும்.

தீய உணர்ச்சிகள் தீமையை உண்டாக்குவது போல, அன்பு, சாந்தம், நம்பிக்கை முதலிய நல்ல உணர்ச்சிகள் உயிர்ச்சத்துகளை உடம்பில் நன்றாக இயங்கும்படி செய்து, உடம்பிற்குச் சுகத்தைக் கொடுக்கும். வயித்தியரின் ஊக்கமான ஆக்கச் சொற்களால் நோயாளி மருந்தில்லாமலும் குணமடைகிறான். நல்லுரைகள் உள்ளத்தையும் உடம்பையும் உருப்படுத்துவதில் அதிசயமான சாதனங்களாய் விளங்குகின்றன. சிறந்த எண்ணங்களாலும் சொற்

களாலும் உடம்பைச் சுகநிலைக்குக்கொண்டுவருவது இயற்கை வழியென்றும், மருந்து முதலியவற்றைக் கொண்டு நோயைக் குணப்படுத்துதல் செயற்கை வழியென்றும் அறிஞர்கள் கருதுகின்றார்கள். கடவுளை வணங்கும் எல்லா மதங்களிலும் நினைவாற்றலின் மூலமாக நோயைக் குணப்படுத்துதல் வழக்கத்திலிருந்துள்ளது நோய்களைத்தீர்ப்பதில் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்யலாம். ஆனால், நோயாளி தானே தன்னைக் குணப்படுத்திக்கொள்ள முயல வேண்டும். 'பாவம் உள்ளவரையில் துன்பம் உண்டு,' என்பதுபோல, பாவச்செயல் உள்ளவரையில் நோய் நீங்காது. அது மன ஆற்றல்களைப் பிரகாசிக்கவொட்டாமல் தடுக்கும். ஒருவர் தமக்குள்ளே அடங்கிக் கிடக்கின்ற நினைவுச்சத்திகளை அறிந்து நன்கு பயன் படுத்தினால், நோய் நீங்கி உடல் நலமும், துன்பம் நீங்கி இன்பமும், வேற்றுமை நீங்கி ஒற்றுமையும் அடைவர். ஒருவர் தமது நினைவை அகண்ட முதல்வர் பால் செலுத்தி அவரது அருள் வெள்ளம் மனத்தில் பாயும்படி செய்துகொண்டால், அங்குள்ள அழுக்குகளையெல்லாம் அவ்வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விடும். நோய் வாராது என்னும் நம்பிக்கையே ஒருவர் உடம்பிற்கு நன்மை செய்யத்தக்கது. கடவுளோடு ஒன்றுபட்ட உணர்ச்சியோடு குணத்தை எதிர் பார்ப்பவர்களுக்கு நோய்கள் விரைவில் குணமாகின்றன. ஏனெனில், எல்லாம் வல்ல இறைவர் சத்தி தம்மைச் சார்ந்தவர்களிடத்து நன்கு விளங்கி வேலை செய்கிறது.

வைத்தியர்கள் நோயாளிகளுக்கு உயர்ந்த நன்னெறியைப் போதிக்க வேண்டும். சட்டத்தின் உண்மைக் கருத்தைக் கவனியாமல் எழுத்தை மாத்திரம் கவனித்தல் பயன் தாராது. நினைவாற்றலினுல் நோயின் குணங்கண்டவர் மற்றொரு நோயாளிக்குப் போதிக்கும் திறமையுடையவராயிருப்பர். நாம் ஒன்றை அஞ்சினுலும் எதிர்த்தாலும், அது நமக்குக் கெடுதி விளைவிக்கும். நாம் அதனோடு ஒற்றுமைப்பட்டுச் சாவதானமாக நம் கருத்தை வற்புறுத்தினுல், நமக்கு அதனுல் ஒரு கெடுதியும் வாராது. எந்த நோயும் அது தங்குதற்கிசைந்த இடம் நம் உடம்பில் கண்டால் ஒழியும். அது நமக்குள்ளே புகாது. ஆதலின், ஔவையார் 'நோய்க் கிடங்கொடேல்,' என்ருர். அவ்வாறே எவ்விதத் தீமையுமாகும். நாம் நம்மை நன்ருகத் தெரிந்துகொண்டு நம்முள் நன்மை புகவும், தீமை புகாமலிருக்கவும் நிபந்தனைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஒருவரை நோய் தாக்குதற்கும், மற்றொருவரை நோய் தாக்காமலிருப்பதற்குங் காரணம் இதுவே.

உயிராற்றல் (ஆன்ம சத்தி) உடம்பின் ஆற்றலுக்கு மேற்பட்டதென்பதை நாம் உறுதியாக உணர்ந்தாற்ருன் உடம்பை நாம் அடக்கியாளலாம். அல்லாவிட்டால், நாம் அதற்கு அடிமையாவோம், நம்முடைய நினைவு அழையாமல். எதுவும் நம்முடைய உள்ளத்திற் புகுவதில்லை. அதை நாம் உணராமலிருக்கலாம். காரணமின்றி ஒன்றும் உலகில்

நடப்பதில்லை. மனத்துள் வந்த எதுவும், மன நிலைக்குத் தக்கபடிதான் பயன் கொடுக்கும். மனம் எதையும் வெல்ல வேண்டுமானால், தன்னை நல்ல நெறியினின்று பிறழவொட்டாமல் ஒழுங்கில் வைக்கும் உயிர்ச் சார்பினை அறிதல் வேண்டும். உயிர்ச் சார்பாகிய அகண்ட முதல்வரை வாழ்க்கைச் சக்கரத்தின் அச்சாணியாக மெய்கண்டார் உருவகித்தனர். 'உயிர்ச்சார்பாகிய முதல்வரை உணர்ந்து அவரோடு ஒற்றுமைப்பட்டு உடலின் தீய சார்புகள் ஒழியும்படி முயன்றால், எவ்வகை மனநோயும் உடல் நோயும் நம்மைச் சாரமாட்டா,' என்று திருவள்ளுவர் குறித்தனர்.

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்
சார்தரா சார்தரு நோய்." [துச்

என்றது காண்க.

நமக்கு உறுதி இன்னதென்று நாம் அறியாமல் நோய்க்குந் துன்பத்திற்கும் நமது அறியாமையினால் இடங்கொடுத்துவிட்டு, என்றும் நமக்கு நன்மைதரும் இறைவரைக் குறை கூறுதல் தவறு. 'காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்,' என்பது போலத் தம் நெஞ்சில் குறையுடையவருக்கு இறைவரது உலகம் குறைவுபட்டதாய்த் தோன்றும். நெஞ்சின் நிலைமைக்குத் தக்கபடி ஒவ்வொருவரும் இருக்கும் உலகம் வெவ்வேறாய் உள்ளது.

இளமை முதற்கொண்டே குழந்தைகளுக்கு நினைவுகளையும் உணர்ச்சிகளையும் ஒழுங்குபடுத்து

தல் வேண்டும். தம்மைச் சூழ்ந்துள்ள பொருள் களுக்குக் குழந்தைகள் மிகவும் ஈடுபடக் கூடியவர் கள். ஆதலால், அவர்களுக்குக் கவலை, அச்சம், ஐயம், துக்கம் முதலியவற்றை விளைக்கும் வாயில்களை விலக்குதல் வேண்டும். நண்பர் உறவினர் என்பவர் களுட்பலர் நன்மை செய்யக் கருதித் தங்களுடைய அச்சத்தாலும் பலவீனத்தாலும் கெடுதி விளைக் கின்றார்கள். நீதியும் மெய்ம்மையும் உள்ள ஒழுங்கு முறையே உடம்பின் சுகத்திற்கும் ஆயுள் நீடித்தற் கும் காரணமாகும்.

நினைவுச்சத்திகளின் ஆற்றல்களை நன்கு அறிந்த வர்கள், ஒருவருடைய மனத்தின் தன்மைபற்றி அவர் கள் பேச்சிலும் செய்கையிலும் முகத் தோற்றத் திலும் ஏற்படக்கூடிய மாறுதல்களை அறிந்து, இன்ன மன நிலையின் பயனாக ஒருவருடைய குரல், செயல், தோற்றம், நோய் இன்னவாறு இருக்கு மென்று கூற வல்லவராயிருக்கின்றார்கள். மனித உடம்பு அதற்குரிய கால அளவுவரை நிலைத்திரா மல் விரைவில் முதிர்ந்து மெலிந்து நசித்தற்குக் கார ணம், மனநிலைக்குறையே என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். ஆயுளின் இயற்கையான காலம் ஒரு நூற்றாண்டிற்கு மேற்பட்டதாயினும், பலர் நெடு நாட்கு முன்னரே இறந்துபோவதால், குறைவுபட்ட காலந்தான் இயற்கையான கால அளவாமென்னும் பொதுவான நம்பிக்கை பிறக்கின்றது. பலர் அப் படியே நினைந்து அந்நினைவினாலேயே தம்முடைய

ஆயுளைக் குறுக்கிக்கொள்ளுகின்றனர். எல்லா மக்களிடத்தும் எல்லாப் பொருள்களிடத்தும் நன்மையே பார்க்கின்றவர்களும், பயம், கவலை, பகை, பொருமை, துக்கம், கோபம் முதலியன இல்லாதவர்களும், நீண்ட நாள் வாழ்கின்ருர்கள் என்பது தெரிகிறது. மனத்தின் செம்மையாலும், கிளர்ச்சியாலும் மிகுந்த வயதுடைய சிலர், இளமைத் தோற்றமுடையவராயிருக்கின்றனர். 'மனம் போல வாழ்வு,' என்றபடி, அவர்கள் மனம் இளமையாயிருப்பது போல உடம்பும் இளமையாகவே இருக்கின்றது. மகிழ்ச்சியான தோற்றமுடையவர்கள், தங்களிடம் வருகின்றவர்களுக்கும் மகிழ்ச்சியையே ஊட்டுகின்ருர்கள். துக்கமுடையவர்கள், துக்கத்தைப் பிறர்க்கும் விளைக்கிருர்கள். இதனுல், நன்மையுந் தீமையும் இயற்கையாகவே ஒருவரிடமிருந்து பிறர்க்குச் செல்லுதல் காண்க. உடம்பைத் திருத்துவதற்குச் சிறந்த வழி நினைவைத் திருத்துவதேயாகும். மனம் இனிய நினைவுகளின் கூடாக இருக்கவேண்டுமென்று இரஸ்கின் என்பவர் கூறினுர். உள்ளத்திலிருக்கின்ற எண்ணங்களும் உணர்ச்சிகளும் வெளியே சென்று தங்களுக்கு இனமானவற்றை இழுத்துக்கொள்ளுகின்றன. ஒன்று கூடி விளையாடுகிற பிள்ளைகளைப்போல ஒத்துள்ள நினைவுகள் ஒன்று கூடும். உற்சாகமும் ஊக்கமும் உள்ளவரோடு கூடி வாழ்வதே உடம்பிற்கும் நன்மை பயக்கும். முயற்சிகள் சித்தி பெருமையால் வரும் கவலைகளினுலும் மனக் குழப்பத்தினுலும் விளையாட்டுணர்ச்சி மனிதனை விட்டு அகலுகின்றது.

பொறுப்புணர்ச்சி ஏற்பட்டுக் காரியக்கவலையுடைய முதியவர்களோடு கலந்து, ஒரே விதமாக நினைக்கப் பழகி, ஆராய்ச்சி இல்லாமலே பிழைகள் இல்லாத இடத்தில் பிழைகளிருப்பதாகக் கருதி, மகிழ்ச்சியைப் பாழ்படுத்தும் நினைவுத் தொடரில் மனிதர் அகப் பட்டுக்கொள்ளுகின்றனர். அது காரணமாக உடம் பிற்கு வெகு விரைவில் முதிர்ச்சி ஏற்படுகிறது. அதனுல், பலவீனமும் அழிவும் உண்டாகின்றன. இக்கெடுதியை நீக்க வேண்டுமானுல், படிப்படியாக ஆன்ம அறிவு அதிகப்பட்டுக் கடவுள் உணர்ச்சி உண்டாகி, மனம் நோயான எண்ணங்களை விட்டு விலக வேண்டும்.

நிறைந்த வளமான சுகமே உடம்பின் இயற்கை யான நிலையாகும். அதற்கு மாருன நிலைகள் தவறி மனமாற்றங்களால் ஏற்படுவனவே. இயற்கைச் சட் டத்தை மீறி நடந்து மனிதன் நோய், துன்பம் முதலியவற்றைத் தேடிக்கொள்ளுகின்ருனே யொழிய, கடவுள் அவற்றை உண்டாக்கவில்லை. நினைவின் ஆற்றல் நன்கு விளங்குங்காலத்தில் வைத் தியன் உடம்பைக் குணப்படுத்த முயலாமல் மனத் தைக் குணப்படுத்தி, அதன் வழியாக உடம்பைக் குணப்படுத்தக் கருதுவான். உண்மையைப் போதிக் கும் ஆசிரியனே உண்மை வைத்தியனுவான். நோயை அது வந்த பின் தீர்ப்பதினும், வருமுன்னர்த் தடுப் பதே நல்லது. ஒவ்வொருவரும் தமக்குத்தாமே வைத் தியர் ஆதல் நல்லது.

உடம்பைப்பற்றியே எப்போதும் கவலைப்படக் கூடாது. அதற்கு வேண்டும் உணவு, ஒளி, காற்று, பயிற்சி எல்லாம் அமைத்தல் நலமே. ஆனால், அதைப் பற்றி அதிகமாக நினைக்கக்கூடாது. எண்ணத்திலும் பேச்சிலும் உடற்குறைகளைப்பற்றி நினைத்தலும் பேசுதலுங் கூடா. சுத்தமான எண்ணங்களே சுத்த மான வாழ்க்கைக்கு ஆதாரம். நாம் எதை விரும்ப வில்லையோ, அதை எண்ணக்கூடாது. எதனோடு நாம் தொடர்புபடுகின்றோமோ, அதன் தன்மையே நமக்கும் வரும். கடவுள் சுகவாரி. ஆதலால், அவ ரோடு தொடர்புற்ற நாமும் சுகவாரியாகவே இருத் தல் வேணடும். கடவுள் எவ்வாறு உடம்புக்கு வேறாக அதன் கட்டுக்குள் அகப்படாமல் இருக் கிறாரோ, அவ்வாறே நாமும் உடம்பிற்கு வேறான அறிவுப்பொருளென்று நம்மை எண்ண வேண்டும். கடவுளோடு நமக்குள்ள ஒற்றுமை அதிகரித்தற்குத் தக்கபடி நம்முடைய உடம்பு தூயதாயும் நோயற்ற தாயுமிருக்கும். உள்ளத்தில் அறிவின் ஒளி மிகுவ தற்குத் தக்கபடி உடம்பும் ஒளியுடையதாயிருக்கும்.

"வெளியா யருளில் விரவுமன்பர் தேகம்
ஒளியாய்ப் பிறங்கியது முண்டோ பராபரமே!"

என்றார் தாயுமானவர். அத்தகைய ஒளி உடலைப் பெறுவதே சிறந்த உடல் நலம் எய்துவதாம்.

10

பெருவாழ்வு

அழியாத இன்பந்தரும் வாழ்வே பெருவாழ்வு எனப்படும். அஃது அன்பு, அறிவு, ஆற்றல், இன்பம் என்னும் எல்லாவற்றினும் அளவற்ற தன்மையுடைய ஒரு பொருளாகிய பெரிய பொருளைப்பற்றி நிற்பதற்குத் தக்கபடி ஏற்படுவதாகும். அப்பெரிய பொருள் நமக்குப் பெருவாழ்வை அளிக்க எப்பொழுதும் தயாராயிருக்கின்றது. நாம் நம்மைத் தகுதியாக்கிக்கொள்ளாமல் வருந்துவதுதான் குறைபாடு. கடவுளுடைய பேரின்பத்தை எப்போதும் அனுபவித்துக்கொண்டிருந்த ஒரு பெரியார், மக்களைப் பார்த்து, 'மனிதர்களே, இங்கே வாருங்கள். நான் ஒரு கனியைக் கொடுத்தால், அதனை உண்டு மகிழ உங்களுக்கு இயலுமா? அஃது யாதெனில், ஈசரது திருவடிப் பேரின்பமே,' என்றார். 'எங்கும் இன்ப வெள்ளமாய்ப் பொங்கிப் பரந்துள்ள அகண்டாகாரப் பூரணப் பொருளை எல்லாரும் புசிக்க வாருங்கள்,' என்று தாயுமானார் கூவியழைப்பதை அவரது அருட்பாடல்களிற்காணலாம்.

மனமானது ஐம்பொறிகள் வழியாக உலகிற் சென்று நிலையில்லாத இன்பத்தையே நாடித் துன்பமாகிய வெயிலில் வருந்துகின்றது. அஃது உட்புறமாகத் திரும்பிப் பேரானந்த ஏரியாகிய கடவுளை நோக்கி ஞானமாகிய மடையைத் திறந்தால், அருள்

வெள்ளமானது நெஞ்சப் புனத்தில் பாய்ந்து, அங்குள்ள நல்ல எண்ணங்களாகிய பயிர்களை வளப்படுத்தும். அந்த முயற்சி எவ்வளவு சிறப்பாக நடக்கின்றதோ, அதற்குத் தக்கபடி உயிரானது பெரும் பயன் மிக்க நல்வாழ்வடைகின்றது. மணி வாசகர் மொழிந்தவாறே உலக மயல்களை விட்டு விலகிச் செல்வத்தையே கருதும் அல்லலையும் வறுமையென்னுஞ் சிறுமையினையும் நினைத்துப் பொழுது போக்குவதை ஒழித்துத் தெய்வம் உண்டென்கின்ற சித்த நிலை திரியாமல் மனம் உறுதிப்படுவதற்கு உயிரானது பழகிக்கொள்ளுதல் வேண்டும். அமைதியான இடத்தில் சாந்தமாயிருந்து பரம்பொருளை நாள்தோறுந் தியானிக்கப் பழகுதல் வேண்டும். அப்போது அப்பொருள் எப்பொருளிலுங் கலந்து எல்லாவற்றையும் இயக்கி, அன்பர்களை நல்வழியிற்செலுத்துகின்ற முறை நமது அறிவிற்குப் புலனாகும். அந்த உணர்ச்சியை நின்றாலும், நடந்தாலும். இருந்தாலும், கிடந்தாலும் நழுவ விடாது நினைவிற்பதிய வைத்தல் வேண்டும். தூங்கும் போதும் அதனை மறத்தல் கூடாது. மாயா சத்திகளாகிய புயல்களாலே அடிபடாமல் அவ்வுணர்ச்சி நிலைபெறுதலே ஞானப் பிறவியாகிய இரண்டாவது பிறப்பாகும். முயற்சி செய்தால் யாவரும் அந்த உணர்ச்சியைப் பெறலாம்.

அருளுணர்ச்சி பெற்றவர்கள் தங்களுடைய குறைகளை ஒழிப்பதற்கும், தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், அருள் மூலத்தையே

நாடுவார்கள். தங்களுக்கு வேண்டிய உலகப் பொருள்களாகிய உடை, உணவு, செல்வம் முதலியவற்றை இறைவர்பால் வேண்டிப் பெறுவது ஆன்மலாப வாழ்க்கையில் தாழ்ந்த முதற்படியாகும். அந்நிலையில் உயர்ந்த அறிவு வாய்க்கப் பெறாத மக்களோடு கலத்தல் கூடாது. தீய மக்களின் தொடர்பு அழுகிய பொருள்களின் நாற்றம் போன்றது. தெய்விக மக்களின் தொடர்பே நல்லுணர்ச்சியை வளர்க்கும். நல்லுணர்ச்சி வளர வளர, விண்ணுலகின் செல்வங்களை இவ்வுலகிலேயே பெறலாம். அருளின் பயன்களைப் பெறுதற்குத் தக்கபடி நமக்கு அன்பு வளரும். அன்பு வளர்தற்குத் தக்கபடி கவலையற்ற சுகம் உண்டாகும். 'இல்லறத்தில் நின்றாலும், துறவறத்தில் நின்றாலும், ஒரு கயிற்றிற்கட்டிய பம்பரத் தொகுதிகள் போல எல்லா உலகங்களையும் ஆட்டுவிக்கின்றனர் கடவுளென்றறிந்து, எதையும் ஆசைப்பட்டுப் பெற முயலாமல், திருவருட்செய்கைக்குட்பட்டு நிற்பாயாகில் இரண்டும் மேன்மை தருவனவே,' என்றார் பெரியார். குற்றமற்ற உலக நலங்களை அனுபவிக்கும் காலத்திலும் மனம் திருவருளை மறவாதிருந்தால், அது தவறான வழியிற்பிறழாது. ஆதலால், அந்த வரத்தை இறைவர்பால் வேண்டுவான் தாயுமானவர் செய்துள்ள பிரார்த்தனையை நாமும் செய்தல் சிறந்தது. அதாவது, 'பூங்கொத்துகள் விரிந்து மணங் கமழும் பொழில்களிலே நல்ல நிழலிற்றங்கியிருந்தாலும், குளிர்ந்த இனிய நீரினைக் கையினால் அள்ளி உட்கொண்டாலும், அந்நீரிடை

முழுகி விளையாடினாலும், தண்ணிய சந்தனமணங் கலந்த காற்றானது முற்றத்தில் உலாவுவது போல நல்ல மாதர்கள் உலாவக் கண்டு மகிழும் வசதி அமைந்த காலத்தும், வெண்ணிறம் மிக்க முழுமதி பட்டப்பகற்போல நிலவு வீசுதலைக்கண்டு இன்புறுங் காலத்தும், விண்ணவர் பெற்ற கடலமுதம் போன்ற அறுசுவையுணவு கொண்டு இன்புறும் காலத்திலும், நறுமணமாலை, வாசனைப் பொருள்கள், வெற்றிலை பாக்கு முதலிய விரும்பின யாவும் விரும்பிய அளவு நுகர்ந்து பல வகை விளையாட்டுகளிற் பொழுது போக்கி இனிது துயின்றாலும், எக்காலத்தும் நின்னருளை மறவா வரந்தந்து அடியேனைக் காத்தருள்வாய்,' என்பது.

ஒருவர் தமக்குரிய வாழ்வு நலங்களையும் கடவுள்பால் வேண்டிப் பெறுவதோடு நில்லாமல், பிற எல்லா உயிர்களையும் தம்முயிர் போல எண்ணி, அவர்கள் நன்மையும் தம் நன்மை போல நாடி, அதன்பொருட்டு அருள் நாட்டம் உடையராதல் உயர்ந்த படியாகும். எல்லா உயிர்களும் உடம்புகளும் கடவுளுடைய கோயில் என்று எண்ணுதல் வேண்டும். அத்தகைய அருள் நிலை கடவுளுடைய கருணையினாலேதான் தமக்குக் கிடைக்கும் என்னுங் கருத்துப்பற்றி,

"எவ்வுயிருந் தன்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே!"

என்றார் தாயுமானவர். அப்படி எண்ணுகின்றவர்களே மெய்யான தவமுடையவர்களென்றும், அவர்கள் அன்பர்களது சிறந்த அறிவு வழியில் நின்று அவர்கள் இட்ட கட்டளையைச் செய்ய விரும்புவது தங்கள் உயர்ந்த கடமை என்றும் அறிவுறுத்துவார்.

"எவ்வுயிருந் தன்னுயிர்போ
லெண்ணுந் தபோதனர்கள்
செவ்வழியை நாடிமிகச்
சிந்தைவைப்ப தெந்நாளோ !"

"தம்முயிர்போ லெவ்வுயிருந்
தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவலென்று
செய்வேன் பராபரமே !"

என்றார். இந்த உயர் நெறியில் நின்ற பெரியார்கள் தங்களுடைய உயிராற்றல்களை அதிசயமான முறைகளில் விருத்தி செய்து பலவிதமான அற்புதங்களைச் செய்வதோடு நெடுநாள் உடம்பு நிலைத்திருக்கத்தக்க காய சித்தி கைவரப்பெற்றிருந்தார்கள். நம்முடைய வெளி உடம்பிற்கு ஆதாரமான நுண்ணிய உடம்பில் கடவுளுடைய சத்தி விளங்கும்படி செய்து பிராண வாயுவை உடம்பில் வற்றா ஊற்றாக நிலைபெறும்படி செய்து, உடம்பினையும் உள்ளத்தையும் ஒழுங்குபடுத்திக்கொள்ளும் நெறியே 'யோக நெறி' எனப்படும். கடவுளின் பலவகையான வியாபகத்திற்குரிய மந்திர வடிவங்களைத் தியானம்

செய்து, அதனால் அற்புத சத்திகள் வாய்க்கப் பெறு தல் யோக நெறிக்கடுத்தபடியாகிய 'மந்திர நெறி' ஆகும். மந்திர சத்தியினால் விடங்கள் தீர்தலும், யோக சத்தியால் உடம்பு நிலைத்தலும் இக்காலத் திலும் சில இடங்களில் காணப்படும். யோக முறை யில் பிராண வாயுவானது உடம்பிலுள்ள முக்கிய நாடிகளில் செல்லுங்காலத்துப் பல வகையான இசை ஒலிகள் கேட்கப்படுமென்று திருமூலர் கூறி யிருக்கின்றார். மணி ஓசை, கடல் ஒலி, யானை முழக் கம், குழல் இசை, மேகநாதம், வண்டுகளின் ரீங்காரம், சங்கொலி, பேரிகை அதிர்ச்சி, யாழின் இன்னிசை என்பன யோகியின் உடம்பில் தோன்றக் கூடியன. யோகம் பயின்று தேர்ந்து சித்திகள் செய்தவர்கள், சித்தர்கள் என்று சிறப்பாகப் பேசப்பட்டார்கள். அணுவிலும் மிக நுட்பமான வடிவம் அடைதல், மலையினும் பெரிய வடிவம் பெறுதல், காற்றினும் மெல்லிய வடிவத்தோடு வான் மண்டலங்களுக்குச் செல்லுதல், தொட்டவற்றைப் பொன்னாக்குதல் முதலிய அருஞ்செயல்கள் உலகத்தாருக்கு உயிராற் றல் (ஆன்ம சத்தி) எத்தகையதென்பதை விளக்கின.

'கற்றாலும், கேட்டாலும், காயம் அழியாத சித்தி பெற்றாலும் இன்பமில்லை. பெரிய பொருளைப் பெறு வதே பேரின்பம் நல்கும்,' என்றெண்ணி, அளவற்ற பரம்பொருளைச் சதா நினைத்திருத்தலே மேலான நெறியென்று சென்றவர்கள் உண்மை யோகிகள் என்று கூறப்பட்டார்கள். அவர்கள் மரவுரி உடுத்

துக் காய்கனி சருகுகளினால் கடுமையான பசியை நீக்கிக்கொண்டு, புனிதநீரில் மூழ்கி, மழை வெயில்களைப் பொருட்படுத்தாமல், உடம்பு வேறு தாம் வேறு என்று கருதி, உடலின்பத்தை விரும்பாது, அறிவின்பத்தை விரும்பி, யோகம் நடத்தினார்கள்.

அத்தகைய யோகநெறியினும் சிறப்பாக, கடவுளோடு இரண்டறக்கலந்து நிற்கும் நிலையை அனுபவத்திற் கைவரப்பெறுதலே உயர்ந்த 'ஞான நெறி' என்று பெரியார்கள் பெரிதும் பாராட்டுகின்றார்கள். அதுவே 'பேசாத மோனநிலை, சும்மா இருக்கும் சுக நிலை, அத்துவிதப்பெரும்பேறு, இராப்பகலற்ற இடம், சகச நிட்டை' என்னும் பெயர்களால் சிறப்பித்துப் பேசப்படுவது. உலக இன்பத்திலுந் துன்பத்திலும் ஒத்த உவர்ப்பு ஏற்பட்டுக் கடவுளது அகண்டாகார வியாபக சத்தியோடு தம்முடைய அறிவு படிப்படியாகக் கலப்பதற்குரிய வழியை ஞான நெறி நின்றவர்கள் நாடினார்கள். அகண்ட முதல்வரது பேரறிவின் சம்பந்தம், வளர்பிறை போலப் படிப்படியாக உயிரின் அறிவில் பதிவதாகும். அது பதியப் பதிய, உயிரின் அறியாமை செருக்கு முதலியன கதிரவனைக்கண்ட இருள் போலப் பறக்கும். அதற்கேற்றபடி விரிவான அறிவு விளக்கமும் மேலான பேரின்ப அனுபவமும் கைவந்து பெரும்பயன் நல்கும். உயர்ந்த தவநெறியில் நிற்பவர்களுக்குக் கடவுளே நேரில் அகண்டாகார அறிவைத் தந்தருள்கிறார் என்பது உயர்சமயக் கருத்தாகும். கடவுள்பாற் பெற்ற

அருள் ஞானமானது படிப்படியாக வளர்ந்தோங்குதல், ஒரு செடியில் அரும்பு, மலர், காய், கனிகள் மெல்லமெல்ல உண்டாவது போலும் என்பர். கனிவு நிலை ஏற்பட்ட அன்பருள்ளத்தே சொல்லுக்கடங்காத சோதி நிலைபெற்று, எல்லைக்கடங்காத இன்பக்கடலாய் இறைவர் விளங்குகின்றார் என்பார்,

"உரையிறந்த அன்பருளத் தோங்கொளியா யோங்கிக்
கரையிறந்த வின்பக் கடலே பராபரமே!"

என்றார் தாயுமானவர்.

இத்தகைய மேலான ஞான நிலையை அடைவது எல்லார்க்கும் எளிதன்று. எனினும், படிப்படியாகச் செய்யும் இடைவிடா முயற்சியால் யாவரும் இதனை அடையலாமென்பதே பெரியார் கருத்து. யாவரும் அடைய வேண்டுமென்பதே இறைவர் திருவுள்ளம். மனிதர் எல்லையற்ற இரு பொருளுக்கிடையில் நிற்கின்றனர். உலகியலில் மனமானது செல்லச் செல்ல, உலகப் பொருளின் ஆசையானது எல்லையில்லாது வளர்ந்துகொண்டிருக்கும். உலக வாழ்க்கைக்கு வேண்டுவனவற்றையெல்லாம் ஒருவர் எல்லாம் வல்ல இறைவரை வேண்டி எளிதில் பெறலாம். ஆனால், அளவு கடந்த ஆசையால் கடவுள் தொடர்பை மனிதர் கைவிடுதல் கூடுமாதலால், 'ஆசையெனும் பெருங்காற்றூடு இலவம்பஞ்செனவும் மனம் அலையுங்கால் மோசம் வரும்,' என்றார். ஆசையின் தன்மையைத் தக்க உதாரணங்களால் அவர் விளக்கியுள்ளார். வறியார்கள் ஆசையால் அடையும் நிலையை

யும் செல்வர்கள் அடையும் நிலையையுங் கூறிக் கடவுள்பால் எவ்வகை வேண்டுதல் நாம் செய்யற் பாலது என்பதை அழகாக அறிவுறுத்துகின்றார் :

"ஒரு சாண் அளவுள்ள வயிற்றின் நிமித்தமாக மாறுபாடுள்ள தர்க்க விவகாரங்களைத் தொடுக்கக் கற்றிருப்பர். மண்ணுலகும் விண்ணுலகும் ஒன்றா யிருப்பதுபோலப் பாவித்து மனம் நிலையில்லாமல் உழலப் பேராசை கொண்டு நிற்கத் தெரிந்திருப்பர். வெவ்வேறு விதமான வேடங்கள் கொள்ளப் படித் திருப்பர். ஏதாவதொரு மந்திரத்தை முணமுண வென்று உச்சரித்துக்கொண்டு உள்ளம் வேறாயிருக் கும் வித்தையை அறிவர். சந்தையிற் பல பொருள் களைப் பரப்பி வைப்பதொப்ப எம்மைப்போலச் சாத் திரங்களைப் பரப்பிக் காட்ட அறிவர். சினங் கொண்ட புலியைப் போலச் சீறி மூச்சடக்கிக் கண் களை மிகச் சிவக்க வைக்க அறிவர். தம் கொள்கை களே உறுதியானவையென்ற செருக்கு, சார்பு முத லிய திக்குணங்களை மேற்கொண்டு சாதித்துரைக்க அறிவர்.

"நில உலகமனைத்தையும் ஒருவர் தம் கீழ் அடக்கியாளப் பெற்றாலும், அதனைச் சுற்றியுள்ள கடல் முழுவதையும் தமது ஆட்சிக்குள்ளாக்க விரும்புவர். நிதிக் கிழவன் போல மிகுந்த பொன் சேர்த்து வைத்தவர்களும், இழிந்த உலோகங்களைப் பொன்னாக்கும் இரசவாத வித்தை கற்பதற்கு அது தெரிந்தாரைத் தேடியலைவார்கள். நெடுங்காலம் நில

வுலகத்திலே வாழ்ந்து வயது சென்றவர்களும், இன்னும் நிலைவரமாக உலகத்திலே வாழ்ந்திருத்தற் பொருட்டு உடலை வலிதாக்கும் காயகற்பம் முதலிய உயர்ந்த மருந்துகளைச் செய்ய முயன்று, அவை கைவாராமற்போயின் மனம் வருந்துவர். இங்ஙனம் ஆசைப்படுவதெல்லாம் எதற்காகவென்று நினைத்துப் பார்க்கும்போது, பசிதீர உண்ணுவதும், உறங்குவதுமாக முடியும். ஆதலால், பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனைந்தப் பொருளே இதற்காக 'நான், நான்' என்று புலம்பி ஒன்றைவிட்டு ஒன்றைத்தொட்டு ஆசைக்கடலில் விழாமல், உள்ளதே போதுமென்ற மனத்தோடுகூடிய சஞ்சலமற்ற தூயநிலையை எனக்கு அருள்வீராக!''

நெஞ்சமானது மாசற்ற அறிவையும் நிலைத்த அன்பினையும் உடையதாய் அகிலத்திற்கும் அச்சாயுள்ள அகண்ட முதல்வரையே பிறழாது சுற்றி வருமாயின், படிப்படியாக எல்லா உயர்நிலையையும் மனிதர் எய்துதல் கூடும். கடவுள் முன் இம்மை மறுமை என்பவைகளுக்கு வேறுபாடில்லை. இவ்வுடம்பு போனல் பிறிதோர் உடம்பு நமக்குக் கருவியாக வரும். கடவுளுக்கு முன் இவ்வுலகம் மாத்திரமன்றி, எத்தனையோ கோடி உலகங்கள் உயிர்களின் வாழ்விற்கிடமாய்த் திகழ்கின்றன. உடம்புகளும் உலகங்களும் தரந்தரமாய் உயர்கின்றன. இறைவரை நோக்கி மேன்மேற் செல்லும் உயிரானது, எத்தனையோ உடம்புகளெடுத்து, எத்தனையோ உலகங்களில் தங்கி,

முடிவாக அகண்ட பரிபூரணப் பொருளோடு இரண்டறக் கலக்கின்றது. பூரண அருளொளியில் உயிர் கலக்குங்கால் உடம்பின் அவசியம் ஒழிந்து போம். அவ்விதம் ஒழிந்த காலை, சுட்டி அறியும் அறிவு அகன்று, அகண்டமாயறியும் பேரறிவு உயிர்க்கு ஏற்படுவதால், அக்காலத்தில் தமக்கு உடல் வேண்டாவென்றும், அது வரையில் தமக்கு உடல் வேண்டுமென்றும் தாயுமானவர் அழகாகக் கூறியுள்ளார் :

"அறிவில் அறியாமை அற்றறிவாய் நின்று
பிரிவறவா னந்தமயம் பெற்றுக்—குறியவிழ்ந்தால்
அன்றைக் குடல்வேண்டேன் ; ஐயாஇவ் வாக்கை
என்றைக்கும் வேண்டுவனே யான்." [யையே

என்பது அவர் கூற்று.

உடல் உள்ள பொழுதே அகண்டாகாரச் சத்தியில் கலந்து ஒற்றுமைப்படுவதையே பெரியார்கள் மிகவும் விரும்பி முயன்றார்கள். அதன்பொருட்டே காய சித்தியைப் பெரியார்கள் அடையக் கருதினார்கள். படிப்படியாய் உள்ள ஆன்ம வளர்ச்சிக்கு எல்லாருக்கும் பொதுவான நெறி அன்பு நெறியே. அன்பின் இயல்பை நூலாசிரியர் பலரும் பலவாறு வருணித்துள்ளனர். அன்பர் தன்மையைத் தாயுமானவர் கூறுமிடத்து, "கல்லைக் கண்டால் ஓடுகின்ற காக்கை போலப் பொய்ம்மாயச் சொற்கண்டால் அன்பர் ஓடுவர். குலம், கல்வி முதலியவற்றால் விளையுஞ் செருக்கினையும் தோற்றப் பொலிவையும் அறவே ஒழித்த புனிதர் அவர். வீண் தர்க்கம் சமயப்

பிணக்கு என்பனவற்றை விழையார். இரவும் பகலுந் தோற்றுமல் அன்பிற்கரைந்து கரைந்துருகி ஆண்டவரை ‘அண்ணல், அரசே,’ எனக் கூவிப் பெற்றேரின் பின் செல்லும் பிள்ளை போல இறைவரைத் தொடர்ந்து, துன்பக் கடல் விட்டு அகல்வார்கள்.” என்ருர். அவர்கள் அகண்டாகாரப் பொருளோடு இரண்டறக் கலத்தலை விரும்புவார்களேயன்றி விண்ணவர்களுடைய பாலமுதத்தையும் விரும்பார்கள். அன்பு செய்யும் முறைமையை அழகாக விளக்குவார், “உள்ளமானது கதிரவனைக் கண்ட கமலம் போலத் திருவருளைக் கண்ட போது மலர்தல் வேண்டும். மேகங்கண்ட மயில் போல இறைவரது ஞான நடனத்தைக் கண்டு களித்தாட வேண்டும். திங்கள் ஒளியை நாடிச் செல்லும் சக்கரவாகப் புள்ளைப் போலத் தூய அறிவிலே தோன்றும் பரஞ்சோதியை உயிர் நாட வேண்டும். அந்தரத்தே நின்ருடுகின்ற ஆனந்தக் கூத்தருக்கே சிந்தையினைத் திறையாகக் கொடுத்து வணங்கவேண்டும். ‘கள்ளன் இவனென்று கைவிடாதிர்!’ என்று வள்ளலைக் கூவி வருந்தவேண்டும். ‘அண்ணு, வா’ என்றரற்ற வேண்டும். ‘செய்வதெல்லாம் நின்பணி,’ என்று மாதேவரை வழுத்தல் வேண்டும்,” என்ருர்.

இதுவரை கூறியவற்றின் தொகைக் கருத்தாவது: எப்பொருளுக்கும் எவ்வுலகத்திற்கும் ஆதாரமாகிய உயிர்நிலை, எல்லையற்ற பேரறிவும், பேராற்றலும், பேரின்பமும் உடைய அகண்டாகாரப்பெரிய

பொருள் ஒன்று உண்டு. அது மாற்றம் இல்லாத உயர்ந்த முறையில் நமது நன்மையின்பொருட்டே உலகை நடத்துவதால், அதனோடு ஒற்றுமைப்பட்டு, அதன் திருவருள் நெறியில் நிற்பதால், எண்ணிய எண்ணமெல்லாம் நிறைவேறும்; குற்றமற்ற அன்பு மிக்க நினைவின் ஆற்றலால், அந்நெறியை அனுபவத்திற்கொண்டு வரலாம். திருவருளோடு ஒற்றித்து நிற்கும் வாழ்க்கை படிப்படியாக உயர்வதற்குத் தக்கபடி கடவுளுடைய பேராற்றல் நமது உள்ளத்திலே மிகுந்த பிரகாசம் அடைந்து, நமக்கு உடல் நலம், செல்வ வளம், சிறந்த அறிவு, நிறைந்த அருள் முதலிய எல்லா நலங்களையும் எளிதில் நல்கும். நல்ல முறையில் தன்னலங்கருதுதல், உலகநலங்கருதுதல், சித்திகள் பெறுதல், யோக நெறி நிற்றல், உயர்ந்த ஞானம் எய்துதல், இறைவர் கழல் சேருதலாகிய இரண்டறக் கலத்தல் எனப் படிப்படியாக உயர்கின்ற எவ்வகை வாழ்க்கைக்கும் இறைவர்பால் அன்பே இன்றியமையாதது. அகண்டாகாரச் சத்தியிற்கலந்து நிலைத்த அறிவு, ஆற்றல், அன்பு, இன்பம் என்பனவற்றைப் பெறுதலே மக்கள் வாழ்க்கையின் முக்கிய நோக்கம். அந்நோக்கம் நிறைவேறுதற்குத் தக்கபடி நாமும் நாடும் உலகமும் பெருந்தன்மையுற்றுப் பெருவாழ்வெய்துவோம். ஆதலால், யாவரும் உலகின் பேருயிர் நிலை யாதென்றறிந்து அதனையே இயன்றவரை நினைவின் துணை கொண்டு பற்றித் தொடர்ந்து, அதில் முற்றிலுங் கலத்தல் முறை.

"யாவையும் எவருந் தானய்
அவரவர் சமயந் தோறுந்
தோய்விலன் புலன்ஐந் திற்குஞ்
சொலப்படான் உணர்வின் மூர்த்தி
ஆவிசேர் உயிரின் உள்ளால்
யாதும்ஓர் பற்றி லாத
பாவனை யதனைக் கூடில்
அவனையுங் கூட லாமே."

என்னும் நல்லுபதேசத்தை என்றும் மறவாது இன்புற்று வாழ்வதே பெருவாழ்வு.